# மயிலிராவணன் சண்டை

## நாடகம்

243



B. இரத்தின நாயகர் & ஸன்ஸ்
திருமகள்விலாச அச்சியந்திரசாலை
சென்னை—1.

விலை] 1953 [அணா 12.

25 JAN 1954
243
1-54
892NMSM
N53
102655

உ

கடவுள் துணை

# மயிலிராவணன் சண்டை

# நாடகம்



சூளை - முனிசாமி முதலியார் பாரியாள்

அம்மணி அம்மாளிடம்

சர்வ சுதந்திரம் பெற்று

சென்னை:

**B. இரத்தின நாயகர் ஸன்ஸ்**

அவர்களால் பதிப்பிக்கப்பெற்றது.

காபிரைட்] 1953. [விலை அணா 12.

உ

சிவமயம்

# மயிலிராவணன் சண்டை நாடகம்

## விக்கினேஸ்பரர் துதி

சீர்மேவு அயோத்தி நகருதித்த ராமன்
திருவடிமே லடியேனும் சிரமேற் கொண்டு
பேர்மேவும் மயிலிராவ ணன்றன் காதை
பேசரிய செந்தமிழாற் பேசு தற்குப்
பார்மேவுங் கயிலைவள ரீச னீன்ற
பரமனுமை மகிழ்ந்தளித்த செல்வப் பிள்ளை
கார்மேவும் வண்ண னுட மருமகனை
கரிமுகவன் திருவடியே காப்புத் தானே.

## முருகர் துதி

பரிமள மாலைபூண்டு பாதாள இலங்கை யாளும்
நெரிமயி லிராவ ணன்றன் நீள்கதைப் பாட வேண்டி
அரியயன் தேடிக் காணு தைம்முகக் கடவு ளீன்ற
கரிமுகற் கிளையோ ரான கந்தனுங் காப்புத் தானே.

## ஆசிரிய விருத்தம்

வையகங் கைகூப் பிராமலட்சு மணரை
மாயை யாய்க் கொண்டு போன
மயிலிரா வணனையும் மாவசுர படையையும்
வதைசெய்யனு மார் புகழையும்
செய்யுள்பல சந்தமாய்ச் செந்தமிழ் நாடகம்
செய்ய தேவரை வேண்டியே
சிவனயன் மால்திருக் கல்யாணி கலைவாணி
சீனிவா சமரி னேடு
ஐயனும் ராகவப் பெருமாள் பகண்டையெழி
லம்மனும் மாரி தேவி
ஐங்கரன் சக்கரத் தாழ்வார் திரிச்சடை
யானபல தேவர் பாதம்
கையினுற் றெழுதுநற் கதைசொலக் கருதினேன்
கருணைசெய் தாளு தற்கே.

## கலித்துறை

அரிராம லட்சு மணனேயும் பேழையடக்கஞ் செய்து
தெரியாமற் சென்றவன் றன்னேயங் கொன்றவன்கீர்த்தியெல்லாம்
பரிவாக வேமயில் ராவணன் நாடகம் பாடுதற்குக்
கரியான னத்த னடியையெந் நாளுங் கருதுவனே.

## பாடியநாள் விருத்தம்

சீரிலங்கும் பிரபவவாண் டாடிமாதம்
தேதியிரு பத்தொன்று மாதிவாரம்
பேரிலங்கும் பஞ்சமியோ டுத்திரந்தான்
பிறங்கு மொரு சுபதினத்திற் பிரியமாகத்
தாரிலங்கும் புலவர்குழாஞ் சூழவென்னேத்
தமிழிலொரு நாடகத்தைச் சாற்றுமென்னத்
காரிலங்குங் காகுத்தன் சரிதந்தன்னிற்
கடைபாக மென்றிதனேக் கழறினேனே.



## விநாயகர் வருவது கவி

வளங்கிரி கயிலே வாசன் மகிழ்ச்சியா யீன்ற பாலன்
உளங்களு மிக மகிழ்ந்து ஒருகொம்புந் துதிக்கை யாடக்
களங்க மில்லாம லிந்தக் கதைக்குள் புரியவேண்டி
விளங்குசெங் கழனி விக்ன விநாயகர் வருகின்ருரே

## வசனம்

அகோ தெப்படி யென்ருல் கயிலாச பதியாகிய மூன்று நேத்திரங்களேப் பெற்றிராகின்ற பரம சிவத்தினுடைய குமாரனுகிய விக்கினேஸ்பரக் கடவுள் சபைக்கு வருகிற விதங்காண்க.

## தரு

செங்கழனி யைங்கரர் வந்தார் சபைதழைக்க
செங்கழனி யைங்கரர் வந்தார்

செங்கழனி யைங்கரரும் கிண்கிணியரையிற்கொஞ்ச
சங்கரனு ருளிய வெங்கயமுகமுடைய செ

முப்புரி மார்பினிலாட மூஷிக வாகனமேறித்
தொப்பையுங்குலுங்கியாட இப்புவியோர்கள் துதிக்க செ

தண்டையுஞ் சதங்கை காலில் தகுர்தத்திகுர்தவென்ன
அண்டர் பூமலர்தூவ அழகாய் நடைநடந்து செ

ஆலயம்நகர்தழைக்க அன்பாய் மனமகிழ்ந்து
மாலைப்பரிமளங்கள் வாடைக்கமகமென்ன செ

பொது வசனம்

இப்படியாகவந்த விக்கினேஸ்பரன் பாதத்தைப் பூசித்துக் கொண்டு தென்னிலங்கைக் கதிபதியாகிய பத்து சிரசுள்ள ராவணேஸ்பரன் கொலுவுக்கு வருகிறபோது சபைதழைக்க அலங்கிருதஞ் செய்யத்தக்கதாகக் கட்டியக்காரன் சபைக்கு வருகிற விதங்காண்க.



கட்டியக்காரன் கவி

மட்டிலாக் கீர்த்தி பெற்ற மகதேவர் நடுங்குஞ் சூரன்
நட்டணையாக லங்கை ராவணன் காக்கும்
பொட்டுமே நுதலில் மின்னப் பூரி பாகையு மணிந்து
கட்டியக்கார வீரன் கனசபை வருகின்றானே

கெட்டியன் தரு

கெட்டிக் கட்டியக்காரன் வந்தானே
ஆ ஆ அதிபல ராவணன் வாசற்கதிபதி
கெட்டிக் கட்டியக்ரான வந்தான்

பட்டுசாலுவை பளபளென்னவே தட்டிசல்லடம் விட்டசுங்குகள்
திட்டமாகவே கட்டியிருக்கியே (கெட்டிக் கட்டியக்)

முறுக்கு மீசையும் முகத்திற் பொரிபறக்க
கெக்கலி கொட்டியே உக்கிரமதாக

கருக்காய்விழித்து கண்டவரஞ்சிட
சிறக்கபொற்சரிகை பாகையிலங்கிட
நிறக்கவேசபை பெருக்கமாகவே
அறிக்கைசொல்லியிதோ (கெட்டிக் கட்டியக்)

கத்திகேடயங்கையிற் பளபளென்னவே
அங்கிநிஜாருடன் அரைதனிற்பூண்டு

கத்தி கத்திகேடையம் கையிலிலங்கிட
பத்தியே இதோ தகதகவென்ன
கத்திவீரரும் வெற்றிகேசிட
தத்தியேநடை சற்றறிந்திடும் (கெட்டி கட்டியக்)

அண்டர்கள் அஞ்சிடும் ராவணனிதோ வாரார்
அச்சமறிந்திடும் யெச்சரிக்கை யிதோ

அண்டர் நடுங்கவே ராவணன் வாரார்
கண்டபேர்களும் தெண்டஞ்செய்ய
தண்டைவீர கண்டாமணியதிர
மண்டலத்திலெவருண்டோ வென்றுமே (கெட்டியக்)

## பொது வசனம்

அகோதெப்படி யென்றால் தென்னிலங்காபுரி பட்டணத்தில் தகத்தோடும் அரசுசெய்துவராநின்ற ராவணேஸ்பரனானவன் இராம லட்சுமணனைக் கொல்லும்பொருட்டு ஆலோசனை செய்யத் தக்க தாக வருகிற விதங்காண்க.

## ராவணன் வருகிறகவி

முடிமகுட மந்திரிக ளெனவேபூண்டு ஏழுவுலகும் கிடுகிடென நடுநடுங்க, படியுலகு அதிரகண்டாமணி யொலிக்கப் பரமனுடகிரி யெடுத்த புயங்கள் விம்மத், தடமகுட வுசிதமந்திரியும் சூழத்தண்ட மழுத்திரிசூலம் வாளுமேந்தி, நடுநடுங்கத் தேவர்களை அதட்டி யவா யால் ராவணனும் வந்து கொலு மேவினனே.



## ராவணன் தரு

வீரராவணதீரன் வந்தானே சூராதி சூரன்
வீரராவணதீரன் வந்தானே

வீரராவணதீரன் றன்சிரம் மேருகிரிகிடம்பாருகூரிடக்
காறுபாருடன்சூரனேறிய தேருநெக்கிட
யாருந்திடுக்கிட (வீரராவணதீரன்)

அண்டரண்டமும் நடுநடுங்கிடவே அதட்டிராவணன்
கண்டபேர்களுங்கடிகி யோடிடவே
கிடுகிடென்னவே சண்டமாருதம்போலே மீறியே
தோள்களைத்தட்டி துண்டர்வீரியர் கொக்கரித்திடவே
சபையைநாடியே சுண்டுவில்லுகள்
பிண்டிபாலமும் கொண்டுகேடயம்
சண்டைகுறடுகள் கொண்டுகரமதில்
மண்டிமல்லர்கள் அண்டி அரக்கரும் தெண்டபன்னவே வீர

மகுடகிரியெனவே
முடிகள்பத்துமே
அணிந்துரத்தின வடிவும்ஆரமும் மந்திரகிரியெனவே

மாரில் நிறைய நெடிய புசமது தோள்கள் நிகரெனவே
நிகரிகென்றிட குடையும் வெகுவிடம் பரவி நிகழ்த்திடவே

சண்டப்பிரசண்டன் அடிகள்தன்னிலே படியமன்னவர்கள்
கிடுகிடென்னவே நடைசொலித்திடவே
காலாளுந்தேரும் வெற்றிகூறியே வீரம்பேசியே
மேருகிரியை பத்தியேதலைச் சுத்திசூழ்ந்திடவே

பளுவுகூறியே சுத்தியேவரக் கத்திகேடயமும்
பளபளென்றிட இத்தலங்களுமூத்துநடுங்கிட
சுற்றபேரிதவண்டமல்லரி முத்துநாகசரங்களுதிடச்
சித்திரமண்டபந் தன்னைநாடியே (வீரராவணாதிரன்)

## ராவணன் கவி

மந்திரி பிரஸ்தா கேளாய் மானிடப் பைய லாலே
இந்திர சித்து மைந்தன் இறந்தன என்ன செய்வேன்
வந்துதே நமக்குத் தீம்பு மைந்தனும் மாண்டபோது
யெந்தன் பேர் அழிந்த தின்று யேகனு ளுகினேனே.

## வசனம்

அய்யய்யோ மந்திரி பிரஸ்தனே வந்த மானிடப் பையலாலே பலவானுன எந்தன் மைந்தனுகிய இந்திர சித்து மாண்டபோது செடியாகிய என்பேரழிந்து தனிமையானனே என்னசெய்வேன் மந்திரிமார்களே.

## ராவணன் துயரப்படுகிற-தரு

அப்பாமகனே என்னசெய்வேன் இந்திரஜெயித்தே
அய்யோமகனேஎன்னசெய்வேன் இந்திரஜெயித்தே
எப்போகாண்பே நானுமுந்தனை இந்திரஜெயித்தே
இறந்தாயோடா நானும்வாட சிறந்தபாலனே
உன்னைப்போலேவீரசூரர் உலகிலறியேனடா மகனே
உறுதி சொல்லி சண்டைக்கேகி உயிரிழுந்தாயோ மகனே
என்னைத்தனிக்க விட்டுமாண்டாய் எந்தன்செல்வமே மகனே
இனியில்லாதகீர்த்திபெற்று உன்னைவுயிரிழுந்தேனே மகனே
ஊருமழிய பேரும்அழிய உடலமும் அழிய மகனே
ஒருமனிதன்கையினுலே வாடியிறந்தாயொ மகனே
ஆருங்கெதியில்லாமல் நான்சீருங்குலைந்தேனே மகனே
அண்டர்களும்உந்தனையுங் கண்டுபணிவாரே மகனே
பெலமிழந்தேன் குலமிழந்தேன் பெற்றபாலனே மகனே
பேதையாகினுலும் உன்னுல் வாதையானனே மகனே
வலுவெழுந்து சிலையொடிந்து மனிதன் கணையினுல் மகனே
மாண்டவிதம் நானறியேன் மாயமென்னமோ (அப்பாமகனே)

## பொது வசனம்

இப்படியாக ராவணேஸ்பரன் புலம்புகிறபோது பிரஸ்தனென்னும் மந்திரியானவன் ராவணனைப் பணிந்துசொல்வது காண்க.

## பிரஸ்தன் தரு

ராவணதீரா சரணமையா மாவெகுவீரா
ராவணதீரனே காலமல்லதுயிர்கொள்ள
மேவிடநானொரு விண்ணப்பம் செய்குறேன் ராவண

திடசித்தமாகவே செயித்திடராமரை
உடனேஅதற்கொரு யோசனைசெய்திடும் ராவண

நமக்கொருகுறையேது நான்சொல்வேன் அதைக்கேளும்
உமக்குப்பின் துணையுண்டு உரைக்கிறேன் தெரியவே ராவ

## பிரஸ்தன் கவி

மைந்தனும் மடிந்தா னென்று மனதினில் வருத்தம் வேண்டாம்
பந்துவா முமது தம்பி பாதாள இலங்கை யாளும்
மந்திர மாயா வாதி மயிலி ராவணனை யிங்கு
இந்தனே ரத்தழைத்தா லிராமனை ஜெயிக்க லாமே.

## வசனம்

சரணம் சரணமையா சுவாமி ராவணேஸ்பரா தேவரீர் வெகு பிரதாபசாலியாய் இருக்கப்பட்டவர் யாதொரு காரியத்துக்குப் விசனமடையத்தகாது அடியேன் ஒருவிண்ணப்பம் செய்கிறேன் அது என்னவென்றால் பாதாள இலங்கைக்கு அதிபதியாகிய உன் தம்பியான மயில்ராவணன் வெகு சாமர்த்திய தந்திரமந்திரமாய் கைப்பொடி வித்தைகளில் மகா வல்லமைசாலி அப்படிப்பட்ட மயில்ராவணனை வரவழைத்து ராமலட்சுமணர் முதலான பேரையும் வெல்லலாமையா சுவாமி.

## ராவணன் கவி

ஆமிது மெய்தான் மந்திரி அறிவுளவேவு கார
தாமரை நூலின் தண்டு தாரையாய் யேகிநீயுள்
நாமுமேஅழைத்தோ மென்று நாழிகை தனிலென்தம்பி
தாமத மில்லா மற்றுன் ஜல்தியில் வரச்செய் வாயே.

## வசனம்

ஆமிது மெய்தான் மெய்தான் அறிவுள்ள மந்திரியேமகிழ்ந் தேன் ஆரடா வேவுகாரனே அதிவேகமாக தாமரைத் தண்டு நூல் தாரையின் வழியாகப் பாதாள இலங்கைக்குச்சென்று எனது தம்பியாகிய மயில்ராவணனை நாம் அழைத்தோ மென்றதாக அதி சீக்கிரத்தில் அழைத்து வாருங்களப்பா வேவுகாரர்களே.

## பொது வசனம்

வேவுகாரர் பாதாள இலங்கைக்குச் சென்று மயில் ராவணனுக்குச் சமாச்சாரம் சொன்ன மாத்திரத்தில் மயில்ராவணன் தென்னிலங்காபுரியை நாடி வருவது காண்க.

## மயில்ராவணன் வருவது கவி

அஷ்டகுல பர்வதங்கள் புயங்கள் விம்ம
அணிந்த நவ மகுடமது கிரிபோ லோங்க
துஷ்டர்களை மதமடக்கும் உக்கிர தீரன்
துலங்கு மணி ஆரமது மார்பிற் றுங்கி
இஷ்டமுள்ள மந்திரிமார் அருகிற் சூழ
யீரேழு லோகமது நடுநடுங்க
மச்ச கெர்ப்பன் வந்து கரங் கூப்பி நிற்க
மயில்ரா வணன் சபைக்கு வருகின்றனே.



## தரு

வந்தானே சபையில் மயில்ராவணன்
வந்தானே சபையில்
வந்தானிதோ சபையில் இந்திராதிதேவரும்வாட

## சுருள்

மண்டலமதிரவே கண்டவர்திடுக்கிட வந்
தண்டர்வீரர்களும் தெண்டமுஞ் செய்திட
அண்டரண்டருக்கெல்லாம் தண்டனென்னவேசூரன்
அடுக்கும்அண்டம்வெடிக்கத் திடுக்கிடஅதட்டியவீரன்

பண்டுஅசுரர்கள்வந்தாரென்று தேவர்வாடப்
பாதாளசேஷனும் யேதோவிபரீதமென்ன

சுருள்

பாரியகிரிகிடம் மேருகிரிவெனச்
சூரியனென்னவே சரியாயிதோ வந்

அடுக்கடுக்காகவே சூரதீரர்களும் நடக்க
ஆரும்யெதிரில்லாத தேரணிமீரர்கள்சூழ்
எடுக்கும் இருப்புலக்கை முடிக்கிச்சுழட்டியமல்லர்
எகிரிகொக்கரித்துமே வெகுவிதபடையுடன் அரக்கர்நெருங்கிட

சுருள்

யெத்தியேதேவன் பத்தியேமோதிட
சுத்தவீரர்களும் வெற்றியேபேசிட வந்

சக்கரம்வளைதடி உக்கிரவேலுடன்சூலம்
தண்டுக்கழுகவுண்டு சுண்டுவில்லம்புகள்யேந்தி
அக்கினியாகக்கண்கள் மிக்கதீபம்போல்எரிய
அனைத்துலகனைத்தையும் க்ஷணத்தில்அழித்திடும்வீரன்

சுருள்

ஆனையில்பேரிகை வீணைமுழங்கிட
சேனையும்வாத்தியம் சிறப்பாயிலங்கிட வந்

பொது வசனம்

இவ்விதமாக மயில்ராவணன் கொலுவில் இருக்கும்போது ராவணன் அனுப்பிய தூதுவர்கள் சேதிசொல்ல அப்போது மயில்ராவணன் பயணமாகி அதிவிவேகமாக வந்து ராவணனைக்கண்டு பணிந்து சொல்வது காண்க.

மயில்ராவணன் கவி

அமரரு முனிவரு மஞ்சியே வணங்க
நமனுமே கண்டு நடுங்கிட விலங்கை
உமதுளங் களிக்கும் உலகாளு மெந்தன்
தமயனே வுந்தன் தாளினை சரணம்.

வசனம்

சரணம் எனது அண்ணாவே ஏது காரியமாக என்னைவரவழைத்தீர் அடியேனுக்குத் தெரிவியும் எனது பிரியமான அண்ணாவே.



## இருவருக்கும் தர்க்கம் தரு

| | | |
|---|---|---|
| ரா. | தம்பிமயில்ராவணனே | என்னசெய்குவேன் |
| | தாயர்தம்பிசேனையெல்லாம் | பரிகொடுத்தேனே |
| மயி. | பரிகொடுத்தேனென்றபோதே | பதறிவாடுரேன்அண்ணா |
| | அரியசொல்லும்பெரியவனார் | அண்டபிண்டத்தில் |
| ரா. | பிண்டத்தில்பிறந்துவந்த | ராமலக்ஷ்மணர்தம்பி |
| | பெண்டுசிறைநீக்கவந்து | கண்டித்தார்களே |
| மயி. | கண்டித்தவர்வந்தபோது | கடிகிசொல்லாமல்அண்ணா |
| | ஒண்டியாகவந்தபோது | உரைக்கவந்தீரே |
| ரா. | வந்தபோதுகுறைகள்நீங்கி | வாழ்வும்பெற்றனேதம்பி |
| | சிந்தையில்துயரகற்றி | செயந்தருகுவாய் |
| மயி, | செயந்தருகுங்கும்பகர்னன் | இந்திரசெயித்துஅண்ணா |
| | அயன்விதியோ மாண்டுபோனார் | ஐயோயென்செய்வேன் |
| ரா. | என்னசெய்வே னிந்தக்காலம் | பேரும்பெற்றேனேதம்பி |
| | அநியாயமாய்ப் பரிகொடுத்து | அலையலானேனே |
| மயி. | அலையவிதி வந்துதையோ | அண்ணாஎன்செய்வேன்மேரு |
| | மலையையொருபுஜமெடுத்த | மார்க்கமாச்சுதே |

### ராவணன் சொல் கவி

விசனமும் படவே வேண்டாம் வீரியத் தம்பி கேளாய்
புசபல விந்த்ரசித்து புகழுள படைக ளெல்லாம்
வசவர மடித்த ராமன் வானரப் படைகள் யாவும்
திசையுளோர் புகழ்ந்து வெல்லச் சீக்கிர முரை செய்வாயே.

### வசனம்

கேளுந்தம்பி மயில்ராவணனே நீ இறந்தபேர்களுக்கு விசனப் படவேண்டாம் கும்பகர்னன் இந்திரசித்து முதலான பலசாலிகளை மடித்த ராமலட்சுமணன் அனுமார் முதலான யெழுபது வெள்ளஞ் சேனை அடங்களும் மாளும்படியாக ஒரு ஆலோசனை சொல்லுந் தம்பி மயில்ராவணனே.

### மயில்ராவண்ன் தரு

எந்தவிதஞ்செய்யச்சொல்கிறீர் ராமலக்ஷ்மணர்படைகளை
எந்தவிதஞ் செய்யச்சொல்கிறீர்
எந்தவிதஞ்செய்யச்சொல்லும் மைந்தன்தம்பிசேனைமாண்டு
சிந்தைவாடியேதனித்து எந்தனைவரவழைத்தீர் எந்

ஒப்பில்லாராமன்தம்பி உள்படஅடங்கலும்
கைப்பிடியாகக்கொண்டு கண்முன்னேவிடவேசொல்லும் எந்

எங்குங்கெடிபெற்றராமன் எழுபதுவெள்ளஞ்சேனையைச்
சங்கரித்துநான்வரவோ சம்மதியுனக்கெப்படி எந்

சொக்குப்பொடிதூவிராமன் துட்டலட்சுமணரைக்கொண்டு
இக்கணம்காளிக்குப்பலி யிரைகொடுக்கசம்மதியோ எந்

### ராவணன் கவி

சொன்னதோர் சொல்லுக் கெல்லாம் தோளுடன் பூரிப்பானேன்
உன்னைப்போல் வீர சூரர் உலகினில் ஒருவருண்டோ
மன்னனே ராமன் தம்பி வளர் துயில்நீங்கா முன்னம்
கன்னமுஞ் செய்து வுந்தன் காளிமுன் வெட்டு வாயே

### வசனம்

கேளுந்தம்பி மயில்ராவணனே நீ சொன்னவார்த்தைக்கு மிகவும் மகிழ்ந்தேன் அந்த ராமலட்சுமணரிருவரையும் நித்திரை நீங்கு முன்னே உனது மாயப்பொடி வித்தையினல் பொட்டிக்குள் ளடக்கி உன்நகரத்துக்குக்கொண்டுபோய் காளிகாதேவிக்குப் பலி கொடுக்கச் சம்மதித்தேன் உனக்கு வேண்டிய வெகுமதி தந்தேன் இன்றிராத்திரிக்குள் அவ்விதமே நடத்திவிடவும் போய்வாருந் தம்பி மயில்ராவணனே.

## பொது வசனம்

இவ்விதமாக மயில்ராவணன் தன் வீரப்பிரதாபங்களைக் கூறி ராவணனிடத்தில் விடைபெற்றுத் தன் நகரமேக இதுகளெல்லாம் அறிந்த திரிச்சடை மகா கஸ்தியடைந்து தனிமையாக வருகிற விதங்காண்க.

## திரிச்சடை வருகிற கவி

சந்திர முகஞ் சொலிக்கச் சர்வபூ ஷணங்க ளாடச்
பந்தியங் கூறிப் போன பாதாள இலங்கை மன்னன்
வந்ததோர் சேதி யெல்லாம் வகையுடன் தந்தைக்கோதச்
சிந்தையுங் கலங்கி வாடித் திரிசடை வருகின்றாளே



## தரு

ஒய்யாரமாதி

வந்தாளே திரிச்சடைதேவி
வந்தாளே திரிச்சடைதேவி
வந்தாளே விநோதமாக இந்திராதியோர் துதிக்க
நந்தன்முகுந்தபாதம் சிந்தைவைத்தனுதினம் வந்

சேலைக்கதிரொளி மேலும் அணிகளாட
பாலவயதுகுண சாலிவசீகரமாக வந்

கற்பினுக்கருந்ததி கன்னிக்கரசியான
அற்புதமிகுந்தப்பெண் ணுமிவளென்றிட வந்

அன்னநடைநடந்து சின்ன இடைதுவளக்
கன்னிஅதிஒய்யாரி துன்னலொளியைப்போலே வந்

## திரிச்சடை கவி

அரிகரி ராம ஸ்வாமி அவர்பாதந் தனிலே தந்தை
சரணமென் றடைந்த தற்குத் தாழ்வுகள் வந்து தையோ
பிரியமாய் ராவணன்ருன் பேசிய விதம் ராமர்க்குத்
தெரியவே வுரைப்பார் காணேன் தெய்வமே என்ன செய்வேன்.

## வசனம்

ஐயையோ தெய்வமே ஸ்ரீ ரகுநாயகர்பாதத்திற் சரணமென்றடைந்த என் தகப்பனுன விபூஷணன் நடந்தவிதத்துக்குத் தாழ்வு நேரும்படி மாயாவித்தையுடைய மயில்ராவணன் வந்து ராமலட்சுமணரைக்கொண்டுபோய் மடிக்கப் பிரதிக்கினை செய்து போன வித மாவது ராமலட்சுமணருக்கு எவ்விதமாகத் தெரியப்போகிறது நானென்ன செய்வேன் தெய்வமே.

## திரிச்சடை தரு

மாயவித்தைகாரனுச்சுதே மயில்ராவணதீரன்
வாரவிதம் யாரறிகுவார்
நேயமானராமஸ்வாமியே உனக்குத்தீம்பு
நேருவிதம் யாரறிகுவார்
நித்திரையில்வந்து உந்தனைப் பொடிகள்தூவி
நீண்டபெட்டிதனிற் போட்டுமே
வித்தையினுலேஎடுத்துமே காளிக்குமுன்னே
வெட்டுவேனென்று பேசினுன்
தந்தைவிரதம் அழியுமே சுவாமியுமாண்டால்
தகப்பனைவெகுபேர் நைவாரே
எந்தவிதமாகத் தெரியும் ராமஸ்வாமிக்கு
இன்றுவருங் காரணங்கள்
நானுமேகிப்போகலாகுமோ சேதிகள்சொல்ல
நல்லதல்லபிழைகள் நேருமே
வானரங்கள்வந்துதவவே நினைப்போமென்ருல்
மன்னன்ராவணனுக் கஞ்சுவார்

## திரிச்சடை வசனம்

திரிச்சடை யம்மனுனவள் துயரமுற்று வாயுவுதேவனைமனதில் தியானிக்க அப்போது வாயுபகவான் வருவது.

## வாயுபகவான் வருகிற கவி

மலரணி மாதுவேண்டி மனதினில் நினைத்தபோது
வலதுடன் எழுந்திருந்து மகுடமும் பளப ளென்ன
நவமணிப்பணிகளாட நாடியவேகத்தோடு
கலையுடன் வாயு தேவர் கடிகியே வருகின்றுரே.



### தரு

வாயுதேவனும் வந்தானே அதிவேகமதாக
வாயுதேவனும் வந்தானே
வாயுதேவனும் வந்தான் மணிமுடியிலங்கிட
பாயுங்கலையிலேறிப் பரிவாய்ப்பயணமாகி வா

பொன்னும் பணிகளெல்லாம் மின்னுங்குலுங்கியாடக்
கன்னிமனதிலென்னைக் காரியமறியவே வா

ஜெகமதிலுண்டான ஜீவசெந்துக்களுக்குச்
சுகமதுதருகின்ற சூரனிவனேயென்ன வா

திரிச்சடைமனதுக்குள் தியானித்தவிதங்களை
புரிச்சடவறியவே பூரணமனதுடன் வா

### வாயுபகவான் வசனம்

வாருமம்மா திரிச்சடையே என்னை நீ யாது காரியமாக வுன் மனதில் தியானித்தாய் தெரியச்சொல்லுமம்மா தாயே.

### திரிச்சடை கவி

வாயுவே சொல்லக் கேளாய் மயிலிராவ ணனைக் கண்டு
தூயவன் ராமரோடு துணைவருந் துயிலும் போது
மாயமாய்க் கொண்டு போக வல்லமை யுரைத்துப் போனய்
போயிதை விபூஷ ணற்குப் புகன்றிட வருள் செய் வாயே.

## வசனம்

கேளும் வாய்வு பகவானே உன்னை அழைத்த விதமாவதுபாதாள இலங்கையாளும் மயில்ராவணன் ராவணனிடத்தில் வந்து ராமலட்சுமணரை நித்திரைகலையாமல் மாயாவிநோதம் செய்து பெட்டியில் அடக்கித் தனது நகரத்துக்குக் கொண்டுபோய் காளிகாதேவிக்குப் பலியிடுவதாகப் பிரதிக்கினை செய்து போயிருக்கின்றான் இச்சேதியை என் தந்தையான விபூஷணனுக்கு அறிக்கை செய்துபோக வேண்டுமையா சுவாமி வாயுபகவானே.

## பொது வசனம்

இப்படியாக வாயுபகவான் விபூஷணரைத் தேடிக்கொண்டு வருகிறபோது விபூஷணர் வருகிற விதங்காண்க.

## விபூஷணர் வருகிற கவி

அண்ணல்கோ தண்ட ராமன் அடியிணை சிரமேற் கொண்டு
வண்ணமாம் பணிகளாட மனுநெறி தவறா மன்னன்
மண்ணுளோர் புகழ்ந்து போற்ற மணிமுடி பளபளென்ன
விண்ணவர் புகழ்ந்து வாழ்த்த விபூஷணர் வருகின்றாரே.



## விபூஷணர் தரு

வேதபாராயண நீதிப்பிரதாபமுள
விபூஷணர் இதோவந்தார் கொலுவதாக
விபூஷணர் இதோவந்தார் விபூ

சூதுகளாகியதுரோகமு மகற்றிய
பாதகராவணன் பேதமணுகிடாத வே

மதுரமொழியுள்ள வதனசிங்காரலோலன்
மணிமுடி இலங்கிடவே இதையமதிலே ராமர்
இருதிருவடிமலர் என்றுமேகுடியாக
அண்ணலே மறவா வே

சந்திரவதனமுகம் தளதளவெனமிக்க
தாரணிமன்னர்கள் யாவர்களுந்துதிக்க
முந்தியராவணன் மொழியும்வசனந்தள்ளி
வந்துகோதண்டராமன் மலரடிவணங்கியே வே

சத்தியந்தவராத சற்குணனிவனென்று
தரணிதனிலுள்ள சகலோருந்துதித்திடப்
பத்தியுடனே ராமர்பார்த்துமனமகிழ
வெற்றிகள்பேசியே சத்திக்கடந்திதோ வே

## பொது வசனம்

இவ்விதமாக வந்தவிபூஷணர் செவியில் அந்தரங்கமாக மயில் ராவணன் வந்துபோன சேதிகளைச் சொல்லிப்போக விபூஷணர் வருத்தப்படுவது.

## விபூஷணர் தரு

என்னசெய்குவேனையோ ராமசுவாமிக்கு
இடர்வரலாச்சுதையோ பொன்னுனராமருக்கு
இந்தவேளை பிழைவரலாச்சுதையோ
தந்திரமாகவந்து மயில்ராவணன்
ஜாலவித்தையால் மயக்கி
எந்தவிதமாவது சுவாமியைக்கொண்டு
யேகுவான் என்னசெய்வேன்
கோதண்டராமர்வந்து பகைமுடிக்க
கொஞ்சமிருக்கையிலே யிகண்டரெனஇகழராமருக்கு
இடர்வரலாச்சு தையோ
சூராதிசூரனையோ மயில்ராவணன்
சொக்குவித்தையிற் பலவான்
ஆராலுமாகாது அவன்மாயை
அறியவும் போகாது என்

## வசனம்

ஐயையோ தெய்வமே ராமசுவாமியானவர் வந்து ராவணனுடைய படைகளெல்லாம் கருவறுத்து ராவணன் தனிமையாய்நிற்க மயிலிராவணன்வந்து உதவிசெய்வதாகப் பிரதிக்கினைசெய்துபோன படியால் இனி நம்மால் கூடியவரையிலுஞ் சுவாமிக்கு உதவிசெய்ய வேண்டு மென்று அதிவேகமாய் ஆஞ்சநேயரைத் தேடிவர, அப்போது அனுமார் வருகிற விதங்காண்க.

## அனுமார் வருகிற கவி

செங்கையிற் கடகமின்னச் செவியிற்குண்டலங்க ளாடக்
கங்கையும் பெருகிப் பொங்கும் கடலதைத் தாண்டும் வீரன்
லங்கையை யதஞ்செய் கின்ற ராமதூ தவனு மென்ன
அங்கமே புளக மாகி யனுமந்தர் வருகின் ருரே.

## அனுமார் தரு

கிடுகிடென்னவே பூமியதிரக்
கிளம்பியேகுதித் தாண்டியே
நடுநடுங்கியே தேவர்வாட
நாடியனுமார் வருகிருர்
குதித்துகுதித்து நடைநடக்கக்
குண்டலங்களும் ஆடவே
பதத்தில்வெண்டையம் கலகலெனவே
பாய்ந்து அனுமார் வருகிருர்
மலைகளெடுத்துத் தோளைத்தட்டியே
மண்ணும் விண்ணும் அதிரவே
அலைகடலையும் தாண்டிகுதித்து
அனுமந்ததேவரும் வருகிருர்
நெடியவாலை முறுக்கிச்சுழற்றி
நீண்டபதக்க மாடவே
கடிகிநடந்து விபூஷணரைக்
காண அனுமார் வருகிருர் கிடுகி

## அனுமார் வசனம்

வாருமையா விபூஷணரே கங்குலாகிய இருளிலே என்னிடம் நாடிவந்த விதத்தைச் சொல்லுமையா விபூஷணரே.



## விபூஷணர் தரு

என்னசொல்வேன்என்னசொல்வேன் அனுமந்தசுவாமி
இன்றுபுதுமைகள் உண்டு அய்யனே
மன்னவன் பாதாளலங்கை ஆளும்வீரனும்
மயில்ராவணனென்று பேருடையவன்
தாயாதியாம்ராவணர்க்குத் தம்பியானவன் அவன்
தன்னலேசுவாமியைக் கொல்லச்சொன்னளவிலே
மாயாசொரூபமாக ராமலட்சுமணனையும் அதன்
வந்துபிடித்துமே யேகினன்
வீரசூரன்அவன்சால விந்தையுள்ளவன்அவனை
வெல்லவும்மிகவரிது சொல்லப்போகுமோ
அவன்வாரவிதம் ஆரறியப்போகுதையனே அவன்
வந்துவிடுவான் இந்நேரம் நொந்துவாடுரேன்
நித்திரைபோருரோசுவாமி அனுமந்ததேவனே நடு
நேரமதிலே அவன் வாரவேளைதான்
சுற்றிலும்பதனமாக பார்க்கவேண்டுமேஇன்று
சுவாமிக்கிடர்வரும்போலக் காணுதையனே என்

## விபூஷணர் கவி

பாவிராவணனுற் சூது பாதிராத்திரி நேரத்தில்
எவினு னெடுத்துப் போக விராமனைச் சமத மாகத்
தேவிக்கும் பலிகொடுக்கத் திறமயில் ராவணன்ருன்
ஆவியைப் போக்க வெண்ணி யனுமனே வருவா னிப்போ

## வசனம்

கேளுமையா அனுமந்த தேவரே பாதாள இலங்கையை யாளும் மயில்ராவணனை வரவழைத்து சுவாமியைக் கொல்லவேணு மென்று ராவணன் சொல்ல, அப்போ மயில்ராவணன் சுவாமிகள் இருவரையும் இருள் நீங்குமுன்னமே சொக்குப்பொடி வித்தையி னலே மயக்கிபெட்டியி லடக்கித் தன் நகரங்கொண்டுபோய் காளிக் குப் பலிகொடுக்கிறேனென்று வீரப்பிரதபங்கூறிப் போயிருக்கிருன் அவன் வருகிறமாயமாவது தேவர்களாலுங் காணக்கூடாது ஆகை யால் அவன் மாயைக்குள் ளகப்படாம லிருக்க உன்கையினலே ஆகவேணும் எனக்கு தயிரியம் சொல்லும் அனுமந்தரே.

## வசனம்

கேளும் விபூஷணரே யிந்த அர்த்தராத்திரி வேளையிலே பன்னக சாலையில் நித்திரைபோகிற சுவாமிமுதலான சேனைக ளதியந்தமடங் கலும் எந்தன்வாலினலே கோட்டை கட்டிக்கொண்டு ஆகாசம் பூமிபரியந்தம் வழிவிடாம லிருக்கிறேன் அப்படிப் போகவேணு மென்ருல் என்வாயினலே புகுந்து செவியினலே உள்ளேசென்று

சுவாமியைக்கண்டு வரலாம் நீரும் படைத்தலைவரும் சுற்றிலும் சங்கீதமேள வாத்தியங்களுடனே சுற்றிக்கொண்டு வாருங்கள் என்று அனுமார்சொல்ல அதற்கு விபூஷணரும் அப்படியே நல்லது அனுமாரே என்றார்.



## அனுமார் தரு

கோட்டையிட்டுக்கொண்டுநின்றானே அனுமந்ததேவன்
கோட்டையிட்டுக்கொண்டுநின்றானே

கோட்டையிட்டுக் கொண்டுநின்றான்
நீட்டியேவாலைச் சுருட்டி
ஓட்டியெடைகளாகப் போட்டுமேலேகூட்டிநீட்டி கோ

சக்கரவளையம்போலச் சர்ப்பமும் வகுத்ததுபோல்
மிக்கத்தன்வாலைநீட்டி மேலுலகமட்டுமோட்டிக் கோ

பூமியிலுலகமுட்டப் புகைபுக இடமில்லாமற்
சாமிசேனையைச்சுற்றித் தன்மானங்கொண்டுநின்று கோ

வாலினாலேகோட்டைகட்டி வானவரெல்லாம்புகழச்
சீலன்விஸ்வரூபங்கொண்டு ஸ்ரீராமராமாவென்று கோ

## பொது வசனம்

இப்படியாக அனுமார் வாலினாலே ஆகாயத்துக்கும் பூமிக்கும் கோட்டையிட்டுப் பத்திரமா யிருக்கும்போது மேற்குத் திசையி

விருக்கிற சுக்ரீபனும் சில வானரவீரர்களும், கிழக்குத்திசையில் அங்குதனும் மேள வாத்தியத்துடனே காத்துக்கொண்டிருக்க விபீஷணன் சுற்றிலும் அறிக்கை செய்து நேரத்துக்கு நேரம் சோதித்து வர, இப்படி வெகு எச்சரிக்கையுடனே இருக்க இப்பால் மயிலிராவணன் கோட்டைவாசல் காக்கப்பட்டவர்களைப் பார்த்துசொல்லும் விதங்காண்க.

### மயில்ராவணன் கவி

எதிர் நின்று கரங்கள் கூப்பி யிருக்கின்ற வேவு காரர்
அதிவேக முடனே தோன்று அரண்மனை தனிலிருக்கும்
சதிருள வூசிமுக்கன் தந்திரக் குடிலன் றன்னைத்
ததியிது சபைக்கு முன்னே தானழைத் தோடி வாடா.

### வசனம்

அடாவாடா வேவுகாரா சீக்கிரமாய் நமதரண் மனைக்குப் போய் அங்கிருக்கும் ஊசிமூக்கனையும் தந்திரக் குடிலனையும் அழைத்துக்கொண்டு வாரும்பிள்ளாய் வேவுகாரா.

### கெடிகன் ஊசிமுகன் வருகிற விருத்தம்

திடுக்கிட வதட்டுந் தீரன் திரண்டதோளிரண்டும் விம்ம
வடிக்கணை பலவுங் கொண்டு மணியணி பணிகாளாடச்
சடுக்கெனவூசி மூக்கன் தந்திரக் குடிலன் கூட
நடுங்கிடத் தேவ ரெல்லாம் நற்சபை வருகின்றாரே.

வீரபராக்கிரம சூரன் அதிவுக்ர
வீரன்குடிலன் வந்தானே வூசிமூக்கன்
சூரனிதோ வந்தானே

வீரபராக்கிரம தீரனிதோவந்தான்
மேருகிரியைக்கையால் வாரியெரிவோமென்று வீரப

அண்டர் முனிவர்மூவர் கண்டாலேநடுங்கிட
அதிகவீரமும்படைத்தோன் ராவணனாலே
துதிகளதிக மெடுத்தோன்

கண்டவர்திடுக்கிடக் குண்டுபுயமுந் தட்டி
மண்டலமதிரவே கண்டாமணியொலிக்க வீரப

தட்டிசல்லடம்சுங்கு விட்டிடையிருக்கியே
தாண்டிக்குதித்திடவே படைகளெல்லாம்
வேண்டித் துதித்திடவே

வெட்டும்பரிசைபாலா வில்லம்புசுரிகையும்
கட்டாரியுடைவாளுங் கரமதிலிலங்கிட வீரப

சத்திக்கும்பேரிகை சல்லரைமுரசுகள்
தவண்டைகட்டாரியதிர காளகம்பூரி
நவபத்துவே விதிர
வெற்றிவீரர்களெல்லாம் சுற்றிலும்நெருங்கிடப்
பத்தியாம்ராவணன் சித்தமறியவே

## கெடிலன் வசனம்

சரணம் சரணம் மயில்ராவணேஸ்பரா இந்த அடியார்களைவர வழைத்த விபரங்களை இன்னதென்று தெரிவியுமையா சுவாமி.

## மயில்ராவணன் கவி

என்ன சொல்வேன் தமையனுட தம்பி மைந்தர்
வீடுபடா அரக்கர்களைக் கொன்ற ராமன்
தன்னுடனே தம்பி தனைப் பிடித்து வந்து
சாமளைமுன் பலியிடுவே னென்று நானே
சொன்னதொரு சபதமது முடிக்க வேண்டும்
சுருக்குடனேதொரு சபதமது முடிக்க வேண்டு
மன்னவரைப் பிடித்துவர எந்த னேடு
மகிழ்ச்சியுடன் மந்திரியே வருகு வீரே.

## வ ச ன ம்

கேளாய் மந்திரிமார்களே தென்னிலங்கையை யரசாளும் என துதமயனுகிய ராவணேஸ்பரன் தன்னுடையதம்பி குமாரர்களையும் சேனைகளா தியந்தமும் மானிடவரான ராமலட்சமணுள் கொன்று விட்டார்கள். அதையறித்த என்தமயன் என்னை அழைத்து வருத் தப்பட்டுக்கொண்டார். அதற்கு நான் இன்றிராத்திரிக்குள் எிரா மல் பேழையிலடக்கி வந்து நமது காளிக்குப் பலி கொடுக்கிறே னென்று சபதஞ்செய்து வந்தேன் அதற்காக நான் இலங்காபுரி பட்டணம் போகவேண்டும் வாருங்கள் மந்திரிமார்களே என்று பயணப்பிரவேசமாக சொக்குப்பொடி மூலிகை முதலானதும் எடுத் துக்கொண்டு மயில்ராவணன் பயணமாகப் போகிறபோது இது களைக் கேட்டறிந்த அவன் தேவியாகிய தீவனமாலை மயில்ராவண னைக் காணவருகிறது.

## தீவர்னமாலை வருவது கவி

பூவனை மஞ்சம் விட்டுப் போகிற கணவ னுக்குத்
தேவியும் நலமுரைக்கச் செங்கையிற் கடகமின்ன
ஆவியும் பதறி வாட அழகுநற் பணிகளாடத்
தீவர்ன மாலை யான தேவியும் வருகின்றளே.



## தரு

தீவர்னமாலைவந்தாள் சிங்காரமாகத்
தீவர்னமாலைவந்தாள்
தீவர்னமாலையிதோ சேல்விழிக்குமைதீட்டிச்
சித்திரவதனரூபி கொத்துசரங்களாடத் தீவ

தீவர்னமாலையும் காவுபூங்கிளிபோலே
ஆவலதாகவே மேவியேசபைதனில் தீவ

முத்துகள் போகன ரத்தினத்தாள்வடமாடச்
சித்திரப்பணிகளும் நெற்றிச்சுட்டி களாட தீவ

முல்லையரும்புபோலே பல்லொளிவீசிட
வில்லும்புருவமேன நல்ல அழகுடையாள் தீவ

சேலையிலங்குமணை சாலிவசீகரி
மேலும்பணிகளாடக் காலில்சிலம்புகொஞ்சத் தீவ

கதம்பகஸ்தூரிகர் மிதமில்லாவாடைவீச
மதமாமயில்ராவனன் பதைப்பதைக்காணவே தீவ

## தீவர்ணமாலை கவி

நெடுமுடி வதன போற்றி நீருமிவ் விரவு தன்னிற்
கெடிகனு மமைச்சர் சூழக் கெதையுடன் பகழி யேந்திப்
பொடியுமு லிகையுங் கொண்டு போகவே பயண மானீர்
கடிகி நீர் நடத்தட் போகுங் காரிய மறிவிப்பீரே.

## வசனம்

சரணஞ் சரணமையா பிராணநாயகா யிந்தராத்திரிக் காலத்தில் மந்திரிகளுடனே பொடிசிமிழ் மூலிகைகொண்டு பயணப்பிரவேச மாகின்றீரே போகிற காரியத்தை அடியாளுக்குத் தெரிவிக்க வேணும் பிராண நாயகா.

## மயில்ராவணன் கவி

என்னுட துணைவி லங்கை யிராவணன் தநயன் தம்பி
தன்னையுங் கொன்ற ராமன் தம்பியுந் தனைப்பிடித்து
இன்னகர் காளிதேவிக் கிரைகொடுத் திடுவே னென்று
சொன்னது முடித்து வாரேன் தோகையே எகுவாயே.

## வசனம்

கேளும் பெண்ணே பிராணநாயகி இலங்கை தாயாதி தமைய னைராவணேஸ்பரனுடைய தம்பி தநயர்முதலான ராக்ஷதானைச் சங் கரித்த ராமலட்சுமணரைப் பிடித்துவந்து நமது காளிக்குப் பலியிடுவ தாக என் தமையனிடத்திற் பிரதிக்கினை செய்துவந்தேன் அந்த விரதங்களை முடிக்கப் போகிறேன் நீ அந்தப் புரத்துக்கு நடவும் பெண்ணே பிராணநாயகி.

## தீவர்னமாலை தரு

நல்லவசனமொன்று சொல்லுகிறேன்கேளுமென் பிராணநாதா
வல்லவாயின்னகர்தன்னை யாண்டிருக்கையிற் பிராணநாதா
இனியென்னகுறைவா யிருக்குதுமக்கிப்போ பிராணநாதா
அனியாயமாய்ராமஸ்வாமி என்றறியாமற் பிராணநாதா
சீதையைராவணன் சிறைவைத்துக்கெர்வித்தான் பிராணநாதா
போதவிபூஷணன் புத்திகேளாமற்கெட்டு பிராணநாதா
ஒண்டியாய்யெமபுரம் ஒடிவழிதேடினான் பிராணநாதா
அண்டியேஉந்தனை அழைக்கிறான்போகாதீர் பிராணநாதா

## வசனம்

ஐயையோ பிராணநாதா ராமலட்சுமணர் ஆதிநாராயணராக அவதரித்தாரென்றும் சீதையை மஹாலட்சுமியென்றும் அறியாமற் சிறைவைத்து ராமரைப்பகைத்துத் தம்பி விபூஷணன் சொன்ன புத்தியுங்கேளாமல் சகலரையும் பரிகொடுத்து தனிமையாய்நின்று எமபுரம்சேர வழிபார்க்கிறவன் தான் கெட்டுப்போவது மல்லாமல் உன்னையும் துணையாக அழைக்கின் நீர் அந்த ராமஸ்வாமிக்குத் துரோகஞ்செய்யாமலிருந்தால் இன்னங் கொஞ்சகாலம் இந்தபா தாள இலங்கையை ஆளலாம் நீர்போகவேண்டாம் வாரும் பிராண நாயகா.

### மயில்ராவணன் கந்தார்த்தம்

அண்டரண்டங்க ளெல்லாம் அதிர்ந்திடும் என்பேர் சொன்னால்
ஒன்றல்ல இரண்டு மல்ல உயிரிலா மனிதர்க் கஞ்சி
துண்டனும் அடங்கு வேனே சொன்னது முடிப்பே னிப்போ
பெண்டுநீ யிருந்து சொன்ன.

### தரு

பிழைகளைப்பொறுத்தேனடி அடிபெண்மயிலாளே
பிழைகளைப்பொறுத்தேனடி

### சுருள்

பிழைகளைப் பொறுத்தேன்
பின்னையும் இன்னமும்
பழுதுகள் சொன்னால்
பலனையு தீர்ப்பேன் பிழை

### தீவர்னமாலை கந்தார்த்தம்

சொன்னது பழுதென் றெண்ணித் துடிக்கின்ற பிராண நாதா
என்னமோ விபரீதங்க ளிசைந்ததிங் குமக்கிப் போது
மன்னராம் ராம.சுவாமி மனிதரென் றெண்ணவேண்டாம்
முன்னாலே ஆதி வஸ்து.

### தரு

மொழிவேன் விபரமாகவே ஓஅதிபலதீரா
மொழிவேன் விபரமாகவே

### சுருள்

மொழிவேன்சோமுக சூரனைவெல்ல
அழகாமச்சவதார மானவர் மொழி

### மயில்ராவணன் கந்தார்த்தம்

குறைவிலா யீசன் வாழும் கொடிமுடி யதம தாக்கிப்
பரப்புக் கிரிக ளெல்லாம் பாரியே கசகசக்கி
அரைநிமிஷத்தி லிந்த அண்டமும் வெடிக்கத் தாங்கி
வருகிறேன் மனிதர்க் கிந்த

### தரு

வலுவுகளேதுசொல்லடி அடிபெண்மயிலாளே
வலுவுகளேது சொல்லடி

### சுருள்

வலுவுடன்ராமரை மாயையினாலே
பிலமுடனேகியே பிடித்திதோவருகிறேன் வலு

### தீவர்னமாலை கந்தார்த்தம்

வேதனை யீன்ற நாகர் விஷ்ணுவோ முற்காலத்தில்
தீதிலா வராக மாகித் திதிமைந்த ருலகைச் சுற்றி
பாதாளங் கொண்டு போன பராக்கிரமந் தனைப் பிளந்து
மேதினி தனைவ குத்து.

### தரு

விஷ்ணுவேராமராகினர் அரக்கரைக்கொல்ல
விஷ்ணுவேராமராகினர்

### சுருள்

விஷ்ணுவாகிய ராமரைப்பகைத்து
கஷ்டமும்அடைகிறார் காணுமுன் தமையன் விஷ்

### மயில்ராவணன் கந்தார்த்தம்

காணுமென் றுரைக்க வந்த கன்னியே சொல்லக் கேளாய்
நாணியே யானைக் கஞ்சி நடுங்குமே சிங்கந் தானும்
வீணுக்கோ வீரம் பெற்றேன் விஜய ராமன் குடல் பிடுங்கி
பூணுவேன் மாலையாக.

### தரு

போடிபதிலுரைக்காதே அடிபெண்மயிலாளே
போடிபதிலுரைக்காதே

### சுருள

போடியெனக்கிந்த புத்திகள்சொல்லவும்
நாடியேவுந்தனை நானழைத்தேனே போ

### தீவர்னமாலை கந்தார்த்தம்

வீரியமும் பேச வேண்டாம் வெகுவல இரண்யா சூரன்
ஆருமே எதிரில்லாத அவனுட நாமந் தந்து
கூறவே தேவ ரெல்லாங் குவலயம் நடுங்க வாழ்ந்தார்
நாரணன் தூணுக் குள்ளே.

### தரு

நரசிங்கரூபமாகினர் அவனுடலைப்பிளந்து
நரசிங்கரூபமாகினர்

### சுருள்

நரசிங்கரூபரும் ராமருமாமே
திரமுடனேகிட மரணமுமடைவாய் நரசி

### மயில்ராவணன் கந்தார்த்தம்

மரணமு மடையவே னென்று வந்தெதிர் பேச தந்தாய்
யிரணமுங் கொடுப்பே னென்கை யிருக்கின்ற வாளுக் குன்னை

தரணியி லென்னைப்போலே தயிரியவானு முண்டோ
அரனெதி ராடுங் காளி

தரு

அவளுக்கே பலிகொடுப்பேன் ராமலக்ஷமணரிருவரை
அவளுக்கே பலிகொடுப்பேன்

சுருள்

அவளுக்கேபலி யாகிடயேகி
யிவளுக்கேகுறை யேதுவாதுகள் அவ

தீவர்னமாலை கந்தார்த்தம்

ராவணன் கொடுமையாலே நலங்கியே வருத்தமாகித்
தேவரும் மூவரோடும் செப்பிய முறைமை கேட்டு
மூவரில் ஒருவரான மூர்த்தி நாரணரும் ராமர்
மேவியே பூமி பாரம்

தரு

விலக்கவே வந்திருக்கிறார் நீயேகிடவேண்டாம்
விலக்கவே வந்திருக்கிறார்

சுருள்

விலக்கவே ராவணன் வீரியமழியவே
கலக்கமாயுன்றனைக் கரவாய்கொன்றிடச்செய்தாது வில



இருவருக்கும் தர்க்கம்

### மயில்ராவணன் தரு

செப்பினமொழியெல்லாம் தப்பிதமேயது
தேவியே என்முன்னே நில்லாதே கற்ற
கல்விநீஎன்கோப பொல்லாதே அடி
இப்போவுந்தனை யெந்தன் வாளினால்
அப்புவேன் இருதுண்டாய் அடியெட்டநடிவடி செ

### தீவர்னமாலை தரு

நடவுமென்றுசொல்லி கடினமாகப்பேசி
ராமரைப்பகைத்திடலாகாதே போக
லாமோநீசாகுவா யேகாதே
கெடுமதியாகிய கீர்த்திராவணன் படை
அடியோடமடிந்ததை யறிந்துநீ தெரிந்துமே நட

### மயில்ராவணன் தரு

என்னிலும்பெரியவ ரின்னமுலகிலுண்டோ
யெடுக்காதவார்த்தைகள் பேசாதே என்னைத்
தடுக்காதேநான்போகக் கூசாதே
சின்னமனிதனுக்குச் சொன்னாயெளிதாயென்னை
கன்னியேஎன்வாளா லுன்னைப்போடுவேன்துண்டாய்

### தீவர்னமாலை தரு

மதத்தினாலே இந்த விதத்தைக்கூறியபேர்கள்
மாண்டுபோனது கண்டுதெரியாயோ அந்த
ஆண்டவன் ராமனென்றறியாயோ
கதித்தமன்னவருக்குக் காலங்கள்குருகியே
விதத்தையறியாமல் வீணிலேமடிவார்கள் மத

### மயில்ராவணன் தரு

அண்டத்துத்தேவரைக் கண்டத்துலகெல்லாம்
அழித்துஒருநொடிக்குள் வருகுவேன் எல்லாம்
ஒழித்துமே வெற்றிநான்பெருகுவேன்
மண்டலந்தனிலுள்ள மானிடராமனைக்
கண்டிருப்பேனடி கண்முன்னே நில்லாதே அண்

### தீவர்னமாலை தரு

புத்தியில்லாதவர்பலம்பெற்று மதிலென்ன
பிழைகள்வந்து கெட்டுப் போகுவார் மன்னா
தழையுஞ்செல்வமும் விருதாகுவார்
சுத்தவீரதீரா சொல்லும் வசனங்களும்
மெத்தப்பெரியராமன் கத்தனைப் பகைத்திடப் புத்

## மயில்ராவணன் தரு

ராமன்ராமனென்று ராமனைப் பெரிதாக
நாடிச்சொல்லவந்ததேதடி அடி
போடி நீசொல்லுவதும் அக்கிரமவார்த்தைகள்
ஆமோவுனக்கிந்த அக்கிரமவார்த்தைகள்
காமிகள்போலவே கைகொட்டியிழுக்காதே ரா

## தீவர்னமாலை தரு

அரியாரோவுலகுக்கு ஆதியாகியராமா
அனுமானுக்கீடு நீயாவியோ அந்தக்
கனவானை யெதிர்த்திடப்போவியோ போனால்
மெரிதானஉன்தலை பூமியிற் சிதறிட
வருவதுசரியென்று மனதிலறியுமன்னா அரி

## மயில்ராவணன் கவி

அடிவாடி யென்னுடைய தேவி நீயும்
அரும்பிழைகள் கூறுகின்ற உன்னை யிந்த
நெடியதொரு வாளுக்கிங் கிரைகொடுப்பேன்
நீயினிமேற் பதிற்பேசநேர முண்டோ
குடிலவூசி மூக்காமந் திரியே கேளாய்
கொண்டகீ ழுலகைவிட்டி லங்கை நாடி
நொடிதனிலே சாரியது போக வேண்டி
நோக்கினே னதிவேக நடைகொள் வீரே.

## வசனம்

அடிவாடி தீவர்ன மாலையே என்னுடைய தேவியே என்முன்னே நின்று சற்றுவது பய மில்லாமல் அரும்பிழைகளைச் சொன்னாயல்லவா உன்னை என் வீரவாளுக்கு இரைகொடுப்பேன் அது யாவருக்கும் யெளிதென்று பொறுத்தேன் இனிஉன்னுடைய நேசமும் வெறுத்தேன் ஆரடா குடிலா வூசிமூக்கா இன்னேரம் பாதாள இலங்கைவிட்டு தென்னிலங்கைக்குப் போகச் சாரியாகிறோம் அதிவேகமாய் நடவுங்கள் மந்திரி மார்களே.

## மயில்ராவணன் தரு

வீரம்பேசியேமீறி யெழுந்தானே அதிவுக்ரதீரன்
வீரம்பேசியேமீறி யெழுந்தானே

வீரம்பேசியேமேருமலைகளை தூரம்போகவேவாரி எரிந்திடும்
தீரன்மயில்ராவணதீரன் அதிவேகமாகவே
அதிகபுயமதுரெண்டுந்தட்டியே அண்டர்தமுனிவருந்தேவர்வாடி
அதட்டி யோங்கியே
அட்டியில்லாமல் தட்டிசல்லடம்

விட்டசுங்குகள் ஒட்டியிருக்கியே
தங்கக்கிரீடமும் செங்கையாடவே
பாசமாகவே தமையன்ராவணன் வார்த்தைக்கிறங்கி
பத்தியாகவேசுத்தவீரனும் தத்தியேதிடசித்தனுகவே
கெடிகனுசிமுக மந்திரிசூழ
கீழுலோகமும் வாழும் வீரனும்
ஆழிவிட்டவைரநாழி தன்னிலே
கடிகிலங்கையை நாடியேவினன்
கந்தமலரணி விந்தைமன்னனும்
மந்திரிசூழவே வந்துநின்றனன் வீர

## மயில்ராவணன் கவி

மந்திரி மாரே கேளீர் மாநகர் தனைக்க டந்து
சந்துதா மரையுந் தண்டு சன்னலா லிலங்கை வந்தோம்
முந்தியே ஒருவன் சென்று மொழிகுவேன் ராமர் சேனைத்
தந்திர மதை யறிந்து சடுக்கென வருகு வீரே.

## வ ச ன ம்

கேளாய் மந்திரிமார்களே பாதாளஇலங்கைவிட்டு தாமரைத் தண்டு வழியாக இலங்காபுரிக்குவந்தோம் இவ்விடத்திலே இருக்கிறேன் நீங்களிருவருஞ் சென்று ராமலக்ஷ்மணர் இருக்கிற விதங்களையெல்லாம் அறிந்து வந்துசொல்லவேணும் மந்திரிமார்களே.

## வசனம்

அப்போது குடிலனுகிய சதுரனெழுந்து மயில்ராவணனைப் பார்த்துச் சொல்வது.

## குடிலன் தரு

ராவணதீரா
நான்போரேனையா
நான்போரேனையா
நான்போரேன்நொடிக்குள்ளே ராமலட்சுமணர்களை
காண்பேன் மணிக்கயிற்றுற் கட்டிப்பிடித்துவா நா

ராமரைநாடி யிருப்பிடம்
தாமுமே தேடி
ஆமோநீயேகவே அற்பமனிதனுக்கும்
பூமியிலிகழ்ச்சியாம் புகழ்ச்சிதானேதுண்டு நா

தப்புரைவிண்டு நான் சொல்வது
எப்போது முண்டு
இப்பவே நான்சென்று இருவரைப்பிடித்துமே
கைப்பிடியாய்க்கொண்டு கண்முன்னே விடுகிறேன் நா

இதுவெகுபெரிதோ சூட்சமுங்காண
அதுவென்ன அரிதோ
விதமுள்ளராமனை விட்டுநன்வந்தாலே
மதியுள்ளசதுரனும் மந்திரியாவேனே நா

### குடிலன் கவி

அருமுனி யசுரர்க் கெல்லாம் மதிபலம் படைத்த நீரே
பெருமையா யிராமன் தன்னைப் பிடிக்கவும் போக லாமோ
கருதினா னேகியேயிக் கணத்தினி லவரைக் கட்கு
வருகிறேன் தனித்து வந்தால் மந்திரி யல்லக் கண்டாய்

### வசனம்

கேளுமையா சுவாமி அசுரர்களுக் கெல்லாம் அதிக வல்லமை படைத்த நீரும் ஒரு மனிதனைப் பெரிதாக வெண்ணிப் பிடிக்கப் போவது யாவருக்கும் நகைப்பாகும் யிதோநான் ஒருநொடிக்குள் ளாகப்போய் அவர்களுடைய புஜபலமறிந்து ராமலட்சுமணரைக் கைப்பிடியாகப் பிடித்து வருகிறேன் அப்படிக்கொண்டு வராவிட்டால் என்பேர் மந்திரி குடிலனல்ல நான்போய் வருகிறேனையா சுவாமி.

வ-ம். அப்படியேபோய் வாருமப்பா குடிலனாகிய மந்திரியே

### குடிலன் தரு

ராமரிருக்கிற விதங்களறியாமல் ஓடினானே மந்திரி
நாலுதிசைகளும்ஓடிஓடியே தேடினானே
பூமியிதுசுவராத்திரிமலையென்று நாடினானே
போகவேகோட்டையைக் கண்டுமிகவேமனம் வாடினானே
கோட்டையோஅனுமந்தன்வாலென்று அவனுமேபிர்மித்தானே
யிதுகொஞ்சங்கொஞ்சமென்றுசுத்திசுத்தியே பிர்மித்தானே
வாட்டமதாகிய வண்டுரூபங்கொண்டு பறந்தானே அண்ட
மண்டலங்களுங்கிட்டிகொண்ட கோட்டையைக்கண்டறிந்தானே
தாழயிறங்கியே அதிசயங்களைப்பார்த்து வந்தானே மந்திரி
தாண்டியேயெப்படி யுள்நுழைவதென்று நாந்தானே
சூழவேவானரம் எச்சரிக்கைகண்டு களைத்தானே மந்திரி
சொன்னவீரியம் பழுதுவருமென்று இளைத்தானே
அனுமசூரனென்று அறியாமற்போனேனேயென்று
ஆரும்போறது செவியினாலேவழி வீணானே அங்கே
மனதுகலங்கியே திரும்பி ராவணனிடம் வந்தானே போய்
வந்தசேதிகளெல்லாம் முன்னேவந்துகூறலானானே

### பொது வசனம்

இப்படியாகக் குடிலன் அனுமாருடைய கோட்டையும் சுற்றிலுமிருக்கும் யெச்சரிக்கையும் கோட்டைக்குள் போகிறவழி அனு

மார்வாயிலே புகுந்து காதிலேபுறப்படுகிற விதமெல்லாமறிந்து மயில் ராவணனைக்கண்டு சொல்லுகிற விதங்காண்க.

## கெடிலன் தரு

என்னசொல்வேன் என்னசொல்வேன் அங்கே
இருக்கும் விதங்களை என்னசொல்வேன்
மன்னவர்சேனை யெல்லாம்உள்ளே
வைத்து அனுமந்தன் வாலாலே
கோட்டைதனை வளைத்து அவன்
கொண்டானே அண்டமுமொன்றாக
நாட்டிலறிந்த தில்லை அதை
நான்கண்டு சொல்லவும் முடியாது
நாலுதிக்கு வானரங்கள் கூடி
நாட்டியமாடியே சுற்றிவர
வாலுமேநீண்ட விதங்களை அங்கே
மன்னா கணக்கில் அடங்காதே
காணுதில்போக வழிவைத்து
காத்துக்கொண் டிருக்கிறான் நம்மாலே
எது இனிமுடியாது வெல்ல
யேகியேபோகலாம் பாதாளம் என்

## குடிலன் விருத்தம்

சரணம் சரணமையா சுவாமி மயில்ராவணதீரா ராமலட்சுமணர் முதல் எழுபது வெள்ளம்சேனை அடங்களும் அனுமார் வாலினாலே ஆகாயத்துக்கும் பூமிக்கும் கோட்டைவளைத்து செவியினாலே வழி விட்டுக்கொண்டு இருக்கிறார் சுற்றிலும் வானரப்படைகள் சுற்றிவருகிறார்கள் அதினுடைய ஆச்சரியங்களை எளிதாகச் சொல்லப்போகாது ராமரைப்பிடிக்க நம்மாலே முடியாது நமது தேசத்துக்குப்போகலாம் வாருமையா சுவாமி.

## பொது வசனம்

இப்படியாக குடிலன் சொன்ன மாத்திரத்தில் ஊசிமுக்கணாகிய சாயத்தியன் மயில்ராவணனைப் பார்த்துச் சொல்லுகிற விதங்காண்க.

## கெடிலன் தரு

இப்படிச்சொல்ல லாகுமோ மன்னா
யேளிதவார்த்தைக ளாகுமோ
ஒப்பிக்கொள்ளப்போமோ ஒருகுரங்கதுவாலால்
எப்படிக்கோட்டை களிட்டுக்கொண்டிருக்கலாம் இப்

குரங்குவாலொருமுழ மிருக்குமோ அண்ட
கோளத்தைமுட்டியே பெருக்குமே

பொருதுமிப்படிக்கொரு புளுகைக்கக்கவேண்டும்
தெரிந்துவந்தசேதி திருவுளம்அறியட்டும் இப்

தரணிபிற்றரித்திரப் பேர்களோ எல்லாம்
தன்னைப்போலெண்ணிடு வார்களோ
குருணிநூருமென்று கொட்டியளக்கிருய்
வருமென்றறியாமலே மன்னனேமுன்னின்று இப்

கெடிகனுல்முடியாமற் போச்சுதே வெகு
கீர்த்திகள்மெத்தவும் ஆச்சுதே
படியுலகிலின்னம் பராக்கிரமனிவனைப்போல்
விடவினிவேறேது வெட்கமில்லாமல் வந்தான் இப்

## ஊசிமுகன் விருத்தம்

சீக்கிரம் நானுமேகிச் சேனையுங் கதறி யோடத்
தாக்கியே சிறுகுரங்கைத் தவடைமே லடித்தே யெல்லாம்
பாக்கியில் லாமற் கொண்டு படைக்கதி பரைப்பிடித்து
நோக்கியே வாராமற் போனல் ரோஷதீர னுமா வேனே

## வசனம்

கேளுமையா சுவாமி ஒரு குரங்காவது ஆகாயத்திற்கும் பூமிக்கும் கோட்டை யுண்டாக்குமோ இந்தவார்த்தை சொன்னபோது இவன் அவர்களுடைய இருப்பிடங் கண்டதில்லை தேவரீர் அடியேனை அனுப்பி வைத்தால் அந்தக் குரங்கைத் தவடையில் அடித்து மடித்துச் சகல சேனைகளையும் அதஞ்செய்து ராமலட்சுமணனைக் கைப்பிடியாகப் பிடித்துக்கொண்டு நிமைப்பொழுதில் தேவரீர் முன்னே கொண்டுவந்து விடுகிரேனையா சுவாமி.

## மயில்ராவணன் வசனம்

அப்படியே போய்வாருமப்பா ஊசிமுக்கனே.

## ஊசிமூக்கன் தரு

## நொண்டிச்சிந்து

வேகமாய்நடைநடந்தான் ஊசிமூக்கன்
வெற்றிசெய்வோமென்றுதிட சித்தமுடனே
போகவேகோட்டைகளைக் கண்டுமிகப்
புத்தியுமகிழ்ந்து ஓடிசுத்தியறிந்து

கோட்டையைக்கடந்துபோக மனதுக்குள்
ஊசியொருபட்சியாக வீசிப்பழுந்தான்
பாட்டைவழிபிளந்து அண்டத்தைப்
பார்க்கிரேனென்றுசொல்லி சீக்கிரமுடன்

சந்திரனுல் மண்டலங்கள் கடந்தப்பால்
சத்தமேகமண்டலங்கள் முற்றுங்கடந்தான்
இந்திரலோகந்தனைக்கடந்து போகவே
இங்குமுடியாதென்றே அங்குத்திரும்பிப்

பூமியிலேமூக்கைநாட்டிக் கடிகியே
பிளந்தானேவரலுமே வளர்ந்திடவே
நாமினிவிடுவதில்லை என்று
நாடியேபாதாளந்தேடியே வந்தான்

அயன்மாலிருவருமே முன்னாலே
அடிமுடிதேடிய வடிவானன்
பயனேதுமில்லையென்று மூக்கைவிட்டு
பார்க்கிலேனென்றுவாடத் தூக்கினனே

அனுமானுமதையறிந்து நல்லதென்று
அசைவுக்குவழிவிட விசையுடனே
தனதுதன்தலை ம்பாக விட்டான்
தரிக்கிறேனென்றனுமான் நெருக்கிடவே

கலங்கியேநடுநடுங்கி ஊசிமூக்கன்
கழுத்தையும் பலங்கொண்டு இழுத்தானே
வலதுகண்தானிழந்து மூக்குமூஞ்சி
வழிபட்டுசெமியுதட்டி பரியடவே

உயிரதுயிழந்தோமென்று பின்னிடைந்து
ஓடிமயில்ராவணனைத் தேடிவரவே
துயர்வினைநொந்திடவே அபிமானம்
துக்கமுடனே அதிக வெட்கமுடனே தண

## ஊசிமூக்கன் கவி

முந்தியே குடிலன் சொன்ன மொழிகளை யிகழ்ச்சி செய்து
வந்தனம் சபதம் சொல்லி வாயிதஞ் செவிமூக் கெல்லாம்
கிந்தியே பின்ன மாகித் திரும்பின னுயிரோ டேகி
விந்தைரா வணனுக் சிந்த விடைசொல்லப் பங்கந் தானே.

## வசனம்

ஐயையோ தெய்வமே மந்திரி குடிலன் சொன்ன வார்த்தையை அதிக இகழ்ச்சிசெய்து மயில்ராவண னிடத்தில் அதிக சாமர்த்தியங்கள்கூறி வந்த இடத்திலே யென் செவிமூக்கு உதடுகள் பழுதாகினேன் யென்னமா மயில்ராவண னிடத்திற்செல்வது மயில்ராவணன் இகழ்ச்சி செய்தாலும் பெரிதல்ல மந்திரி குடிலன் நகைப்பானே இதற்கென்ன செய்வேன் தெய்வமே.

வசனம்

இப்படியாக ஊசிமூக்கன் பங்கமாகி ராவணனிடம் வந்து சொல்ல வெட்கமாக இருக்கின்றபோது மயில்ராவணன் இவ்விதஞ் செய்தவர்கள் யாரென்று கேட்பது.

மயில்ராவணன் தரு

இந்த அவமானஞ்செய்தவனாரடா இப்போ
இன்னதென்று யென்னுடனே கூரடா
வந்துமுன்னேவெட்கிநின்ற மந்திரி யென்ன
வல்லமைகள்கூறி போனாய் தந்திரி
மூக்குசெவிபோக்கினவனாரடா உந்தன்
முகத்தைக்கெடுத்தவ னாரடா
சீக்கிரமாயென்னுடனே சொல்லடா உன்னை
சின்னஞ்செய்தவரைச்சொல்லி நில்லடா
எப்படிக்கொற்ற வனவன்பார்க்கிறேன் இப்போ
என்னுடவஞ்சமெல்லாம் தீர்க்கிறேன்
பங்கப்பட்டோமென்று மனம் வாடுராய்இப்போ
பயமதுபிடித்துவேறே சாகிராய்
உங்கள்குறைதீர்க்க நானும்வல்லேயே இப்போ
உந்தனுக்குவந்த தெனக்கில்லேயோ

வசனம்

வாருமப்பா மந்திரி நீ யாதொன்றுக்குப் பயப்படாமல் உன்னை யிப்படி பங்கம் செய்தவன் இன்னாரென்று சொல்லுமப்பா மந்திரி யாகிய ஊசிமூக்கனே.

மந்திரி தரு

வந்தவெனையாபங்கமாகி யெந்தனுடவார்த்தைகேளும் ராவணேசா
இந்திரநீலப்பர்வதம்போல வந்தனுமான் வாலினாலே ராவணேசா
கோட்டையோசேனையுடநாட்டிலே நான்கண்டதில்லை ராவணேசா
வாட்டமாய்பக்ஷிரூபமாய் நீட்டிநான்பறந்துபோனேன் ராவணேசா
அண்டமும்நெருங்கப் பார்க்கக்கண் டறியேனேசிகரம் ராவணேசா
மண்டலமகற்றிக்கீழே பன்றிபோல் களைத்துவாடி ராவணேசா
வாளையுங்கிளம்பித்தலை சீவனேபுகரவிட்டேன் ராவணேசா
மேலும்வந்திருக்கவாங்கிக் காலியாக்கி வந்தேனையா ராவணேசா

ஊசிமூக்கன் கவி

யென்னமாய்ச் சொல்வேனையா இருக்கின்ற விதங்களெல்லாம்
மன்னவா நீர்போனாலும் வரும்பங்கம் போகொணாது
சொன்னது நசமென்றெண்ணிச் சுருக்கினிற் பயணமாகி
நன்னகர் தனிலேயேக நன்மையாம் வருகுவீரே.

## வசனம்

கேளுமையா ராவணேஸ்பரனே அவ்விடத்தில் அனுமார் இருக்கிற ஆங்காரமும் கோட்டை விநோதமும் வானரங்கள் நித்திரையில்லாது எச்சரிக்கையிருப்பா னதையும் ஆதிசேடனாலும் சொல்லமுடியாது நீர் அவ்விடம் போனபோதிலும் அபஜெயம் வரும் நமது பட்டணத்துக்கு நடப்பது ஜெயமென எண்ணலாமையா சுவாமி ராவணேசா.

## மயில்ராவணன் வசனம்

வாருங்கோள் மந்திரிமார்களே என் தமையன் ராவணனிடத்தில் அதிக வீரபாஷை கூறிவந்தேன் எவ்விதமாவது ராமலட்சுமணரைப் பிடித்து வருகிறேன் நீங்கள் இவ்விடத்திலே தானே இருங்கோள் மந்திரிமார்களே.

அகோதெப்படியென்றால் மயில்ராவணன் சென்று கோட்டை முதலான விந்தைகளைச்சுற்றி அறிந்து அனுமார் இருக்கிறயிடத்தில் வந்து பதிவிலிருக்கிறபோது அப்போது விபூஷணர் கோட்டையைச் சுற்றிவந்து அனுமாரைக்கண்டு சொல்லுகிற விதங்காண்க.

## விபூஷணர் சொல் வாசாப்பு

அனுமாரேபோயிவ்வேளை யெச்சரிக்கை
அர்த்தராத்திரிவேளை யெச்சரிக்கை
மனவேகமாகவே சுற்றிவாரேன்
மயில்ராவணன்வரும்வேளை யெச்சரிக்கை

## அனுமார் சொல் எச்சரிக்கை

கனமானவிபூஷணரே நாலுதிக்கும்
கண்டுஅவரவர்க்குச்சொல் யெச்சரிக்கை
க்ஷணமாவது நித்திரை செய்திடாமல்
சீக்கிரமுடனேகச்சொல் எச்சரிக்கை

## பொது வசனம்

இப்படி விபூஷணர் சொல்லிப்போனவுடனே மயில்ராவணன் இது சமயமென்று விபூஷணரைப்போல உருவமெடுத்து வருகிற விதங்காண்க.

## மயில்ராவணன் தரு

உருவெடுத்தான் விபூஷணனாக மயில்ராவணதீரன்
உருவெடுத்தான் மாய்கையாலே
ஒன்றும்ரெண்டும்பேதமில்லா புருவமும்வதனமெல்லாம்
பொன்மணியும் மின்னியாட உ

வாடைபரிமள கெந்தம்
வாசனை சவ்வாதணிந்து
சாடையும் சரியெனவே
தந்திரமறிந்த வீரன் உ

ஆசையும்பாசமும் அந்த ஓசையும் ஒன்ருகப்பேசி
வீசியேநடைநடந்து விட்டசுங்கிடையிற்கட்டி உ

மாயப்பொடிதானெடுத்து வச்சிரகவசம்பூண்டு
நாயகன் விபூஷணன்போல் நல்லவனிவனென்னிறிட உ

## மயில்ராவணன் வாசாப்பு

ஆரானுமறியாத சூரனும் வருவான்
அனுமாரே எச்சரிக்கை
பேரானுயர்ந்த மயில்
ராவணன் வரும்வேளை
பிலவானே எச்சரிக்கை

## அனுமார் சொல் வாசாப்பு

வாருய்விபூஷணுநீ போனக்ஷணத்தினில்
வந்தது எந்தவிதமே
பாராய்நீவந்தது சங்கையாயிருக்குது
பகருவா யின்னதென்றே

## வசனம்

வாரும் விபூஷணு நீர் வந்துபோய் இன்னம் ஒரு நொடிநேரமாகவில்லையே இதற்குள் கோட்டை எப்படிச் சுற்றிவந்தாய் சொல்லும் விபூஷணு.

## மயில்ராவணன் வசனம்

வாராய் அனுமந்தா அர்த்த ராத்திரிவேளையில் மயில்ராவணன் வருகிற வேளையாச்சுதென்று சுவாமிக்கு குற்றம் வரப்போகிறதென்று அதிக வேகமாக வந்தேன் கோட்டைக்குச் சென்று சுவாமி நித்திரையில் இருப்பது நித்திரை நீங்கி யிருப்பதும் அறிந்து வருகிறேன் வழிவிடும் அனுமந்தா.

## அனுமார் வசனம்

ஆனல் போய்வாருய் விபூஷணரே.

## பொது வசனம்

அப்போது மாயவிபூஷணன் அனுமார் வாயிற்புகுந்து செவியினல் வெளிப்பட்டு கோட்டைக்குட் சென்று மகா சந்தோஷமாக சுவாமியைத் தேடி வருகிற விதங்காண்க.

## மயில்ராவண்ன் தரு

### நொண்டிச்சிந்து

சந்தோஷமாகநடந்தான் சூரன்
தங்காமலொருவிதம் எங்குமோடியே
வந்தானேபாளையங்க ளிருப்பிடம்
மன்னவனும்சேனைகளைத் தன்னைமயக்க
சொக்குப்பொடி மருந்தெடுத்தான்சூரன்
தூற்றினன்பாளையத்தில் காத்துவரப்
புக்கியேராமரைக்கண்டு கடிகியே
போட்டானேசொக்குப்பொடி வாட்டமாகவே
பொட்டியிலே ராமரைத் தூக்கிவைத்து
பின்னுமந்தலட்சுமணரை தன்னையும்வைத்து
கட்டினன்மணிக்கயிற்றால் அசையாமல்
கக்கத்திலெடுத்தடக்கி யுக்ரமுடனே
திரும்பினன்விசையுடனே சூரனவன்
சிந்தையுங்களித்துமிகச் சந்தோஷமாக
வரும்வழிதனையறிந்து அனுமாரே
வாயைத்திறவுமென்று போனன்வெளியில்

### மயில்ராவணன் கவி

அதிபல அனுமாசூரர் அறிந்துநான் வந்தேனிப்போ
பதினைந்து நாழியாச்சு பத்திர மிந்தவேளை
விதமெனைப் போல்வந்தாலும் வேஷபா சாங்கென்றெண்ணி
அதையும்நீ நம்பவேண்டாம் அறிந்தெலாந் தெரிந்துவாரேன்.

### வசனம்

கேளும் அனுமந்த சூரனே சுவாமி முதலான சேனைகளெல்லாம் அதிக நித்திரையில் இருக்கிறார்கள் நீ அதிக ஜாக்கிரதையாயிருக்கவேண்டும் இப்போதானல் அர்த்த சாமவேளையாகிறது மயில் ராவணன் வருகிற சமயம் அவனே மாயாகபட சூஸ்திரவினேதன், வல்லவன் அதுவுமன்றியில் நானு விதமாக வருவான் பின்னையும் என்னைப்போல் ரூபங்கொண்டு அதிக பாசாங்குடன் வருவான் அதுகண்டு உள்ளே நம்பி வழிவிடாதே நான் வெளிப்பட்ட அவாளவாளுக்கு யெச்சரித்து அவன் வருகிற கள்ளவழிமார்க்கம் அறிந்து வருகிறேன் உன்னலேதான் சுவாமி பிழைக்கவேண்டும் அதிக ஜாக்கிரதையாக இரும் அனுமந்தா.

### அனுமார் வசனம்

அப்படியே ஜாக்கிரதையாக இருக்கிறேன் போய்வாரும் விபூஷணரே.

## பொது வசனம்

இப்படியாக மயில்ராவணன் மகத்தாகிய சந்தோஷமாகி தனது மந்திரிகளேயும் கூட்டிக்கொண்டு தன்னுடைய பட்டண மேகிப் பெட்டியைக் காளிகோவிலில் வைத்து பூசைக்கு ஆரம்பம் செய்து இருக்கும்போது விபூஷணர் அனுமாரண்டைக்கு வருகிற விதங்காண்க.

## விபூஷணர் வாசாப்பு கவி

சுந்தரா யிதுவேளே யெச்சரிக்கை
சூர அனுமந்தனே யெச்சரிக்கை
தந்திர மயில்ராவணன் வரும்வேளே
ஜாக்கிரதை அனுமந்தனே யெச்சரிக்கை

## அனுமான் வாசாப்பு கவி

வந்துநீயுள்ளவே யேகியே எல்லாம்
மகிழ்ச்சியா அறிந்து வெளியேகி னீரே
எந்தவிதம் சுருக்கினில் யிப்படி வருகுரீர்
எனக்கரியச் சொல்லுவீரே இன்பவானே

## அனுமார் வசனம்

கேளும் விபூஷணரே இந்நேரம் நீர்வந்து கோட்டைக்குட் சென்று அவ்விடத் ததிசயங்களே என்னுடனே சொல்லி மயில் ராவணன்வரும் கள்ளவழி மார்க்கத்தை அறிந்து வருகிறேனென்று சென்றீரே அதற்குள் கோட்டையைச் சுற்றி வந்தானென்கிறீரே என்னமாயமாக வந்தீர் சொல்லும் விபூஷணரே.

## விபூஷணர் தரு

மோசம்போனீரே அனுமந்ததேவா
மோசம்போனீரே

மோசம்போனீரவன் நேசமுடன்வந்து
பேசியேசுவாமியைக் கூசியெடுத்துப் போக (மோ)

நாயகர்கோட்டைக்குள் நானும்சென்றதில்லே
மாயமாயென்னேப்போல் வந்துமயங்கிட (மோ)

கெடுத்தீரேசுவாமியின் கீர்த்தியழிந்திட
எடுத்துப்போகச்சூது என்னேப்போலவந்து (மோ)

கடலெல்லாம் தாண்டியோர் கால்வாயைத்தாண்டித்
திடமில்லாவீரம்போல் செய்தீரே அனுமந்தா (மோ)

## அனுமார் கவி

இந்தமொழி அனுமந்தன் செவியிற்கேட்க
யிடிகேட்ட நாகம்போ லேங்கி வீழ்ந்து
சிந்தையுமே யினியில்லாக் கலக்கமாகித்
திகைத்துமே கடகடென்று புரண்டெழுந்து
எந்தனுட மதிமயங்க வந்த சூதை
என்னாலு மறியாமற் போனே னென்று
நைந்துருகி முகத் துறைந்து பூமி மோதி
நடுநடுங்கித் துடிதுடித்துப் புலம்புவாரே.

## வசனம்

இப்படியாக விபூஷணர் சொன்ன வார்த்தை அனுமார் செவியிற்கேட்டு நாராசத்தைக் காச்சிவிட்டதுபோற் சுருக்கிட்டு யிடிகேட்ட நாகம்போற் பூமியில் விழுந்து கடகடவென்று புரண்டு மயில்ராவணன் வந்த சூதையறியாமற் போனேனென்று முகத்திலே மோதி பூமியில் அறைந்து புலம்புகிறவிதம் யெப்படி யென்றால்

## அனுமார் புலம்புவது தரு

என்னசெய்வேன் யென்னசெய்வேன்
யேதுசெய்வேன் ரகுராமா
உன்னைநானிழந்து ஐயோ
உயிர்பிழைத்திருப் பேனோதான்
பாலுக்கும்காவலாகிய பூனைக்குநான் தோழனானேன்
வாலக்குயிலானசீதை வருத்தந்தீரவந்தோமையா
விந்தைராவணன்படையை வெட்டியெரிந்தீரையோ
அந்தியத்தில் உந்தனுக்கு அகடுவரக்காலமாச்சே
மாய்கையாய்விபூஷணன்போல் வந்தமயில்ராவணனை
சாயலைநான்மெய்யென்றெண்ணி சுவாமிஉனை நானிழந்தேன்

## அனுமார் கவி

மேதினி புகழுகின்ற விபூஷணா மோசம்போனேன்
சோதனை செய்துபார்க்கச் சுவாமியைக் காணேனையா
நாதனை யிருவ ருக்கும் நமனும்நா னாகி னேனே
யேதினி செய்வேனையா யிறந்துநான் போகுவேனே.

## வசனம்

ஐயையோ விபூஷணரே பாளயங்களெல்லாம் சோதித்துப் பார்க்கையில் சுவாமிக ளிருவரையுங் காணேம் யான் ஸ்ரீ ரகுநாயகருக்கு இதுவரையில் சகாயமாக இருந்தும் இன்றைக்கு எமனாகினேன் சுவாமிகளை யின்னேரம் யென்ன செய்தானோ தெரியவில்லை

நான் இவ்விடம் இருக்கப்பொருந்தேன் என்னுயிரை மடித்துக் கொள்ளுகிறேன் விபூஷணரே.

## விபூஷணர் தர்க்கம் தரு

அடியவனுகை சுவாமி
அவனென்பேர் கொண்டுபோனன்
படியினுள் ளோர்நகைக்கச் சுவாமி
பாவினு ஞகினனே

## அனுமார் தரு

பாவியும்நீயல்லவோ எண்ணிப்
பாராமல் தூராேனேன்
ஆவிபதறுதையோ எந்தன்
அழகரை யென்று காண்பேன்

## விபீஷணர் தரு

காணவே காளியற்குச் சூரன்
கடுகபலி யிடும்போது
தோனுமோராமருக்கு நானும்
துரோகமும் செய்தேனே

## அனுமார் தரு

செய்தேனே நான்துரோகம் அவர்
செங்கையும் தங்கநிறம்
வையகந்தனிலொருவர் அவர்
வலுவுக்கு நிகரேது

## விபூஷணர் தரு

ஏதுசெய்வேனையா சுவாமிக்கு
இப்படி நாமிருந்தும்
சூதுசெய்தசூரன் திறமென்னுற்
சொல்லவும் நல்லவனே

## அனுமார் தரு

நல்லவர்நீரென் றெண்ணி இங்கு
நான்வழி விட்டேனையோ
வல்லவனென்றறிந்தாற் காலை
வாரியடித் திடுவேன்

## விபூஷணர் தரு

அடித்திடுவேனென்ற வீரம்
அனுமாரே எங்கேவிட்டீர்

கெடுத்தீரே காரியத்தை நமது
கெலிப்பு வலிப்பாச்சே

## அனுமார் தரு

வலிப்பேனவன்தேசம் அதற்கு
வழியைநீர் காட்டுமையா
புலிப்போல் நான்பாய்ந்து சுவாமி
பொன்னடி கண்டுவாரேன்

## விபூஷணர் கவி

தக்கதோர் ரிலங்கை யாழி தன்னிலே கமலத் தண்டால்
புக்கியே பாதா ளத்தைப் போகவேநெடுந்தூரத்தில்
அக்கினி கோட்டை தாண்டி அவ்வழி தராசுந் தாண்டித்
திக்குக்கோட் டைகளுங் காளி தேவியுமா லயமுந்தானே.

## வசனம்

கேளும் அனுமந்தா பாதாள இலங்கைக்கும் போகிறவழி யானது நடுச்சமுத்திரத்தில் ஒரு தாமரைப் பூவிருக்கின்றது அந்தத் தாமரைத்தண்டின் சன்னலாலே புகுந்து வெகுதூரம் சென்றால் அக்கினிக்கோட்டையும் காவல்காரருமுண்டு அதைத்தாண்டிப் போனால் சத்துருதடாகம் காவலருமுண்டு அவர்களையெல்லாம் ஜெயித்துக்கொண்டு அப்பாற்போனால் அவ்விடம்சென்றால் மயில் ராவணனுடைய சபாமண்டபம் கொலுக்கூட முதலானதும் தெரியும் அதைத் தாண்டிச் சென்றால் காளிகாதேவி சன்னிதானம் வடக்கே காணும் ஆனால் வழிமார்க்கத்தில் பராக்கிரமசாலிகளிருப்பார்கள் அவர்களைச் செயித்துப்போக உன்னாலேதான் ஆக வேண்டும் சீக்கிரம்போய்வாரும் அனுமந்தரே.

## பொது வசனம்

அப்போது மயில்ராவணன் பாதாள இலங்கையை நாடி வருவது.

## அனுமார் பாதாள இலங்கைக்குப் போவது

## தரு

கடுகியெழுந்து ஆக்கரித்துக்
கண்ணையுருட்டி விண்ணுமதிர
நடுநடுங்கிடத் தேவரெல்லாம்
நாடியனுமார் வருகிறார்

தத்திக்கடலைத் தாண்டிக்குதித்து
தாமரைத்தண்டைக் கையாற்பிடித்து

வெற்றியாக வழியுட்புகுந்து
வீசியனுமார் வருகிறார்

சித்தங்கொதிக்க ஆக்கரித்துமே
திரண்டபுஜங்கள் துடிதுடிக்கவே
உத்துப்பார்த்து வழியைக்கடந்து
ஓடியனுமார் வருகிறார்

கண்டபேர்களும் திடுக்கிட்டலறக்
காதிற்குண்டலங் கடுகியாடவே
சண்டமாருதம்போலே மீறியே
தாண்டியனுமார் வருகிறார்

தண்டைவெண்டயங் காலிலாடவே
சகலவிருக்ஷம் விசையாற்சாயவே
ரண்டுபுயமும் துடிதுடிக்கவே
நாடியனுமார் வருகிறார்

ஆதிசேஷன் முதுகுநெளிய
அதிரத்தாண்டி நடைநடக்கவே
பாதிராத்திரிநீங்கி நித்திரை
பலபேர்கதறி யலரவே

ஏதுசெய்குவேன் ராமர்பாதம்
யென்றுகாணுவே னென்றுபொங்கி
வாதையாகிய விசையோடேகி
வாடியனுமார் வருகிறார் (கடிகி)

## பொது வசனம்

அகோதெப்படி யென்றால் அனுமார் பாதாள இலங்கையை நாடி வருகும்போது அக்கினிக் கோட்டைவாசல் காவலாளியாகிய மச்சவல்லபன் கொலுவாக வருவது.

## மச்சகெர்ப்பன் வருவது கவி

வளம்பெரு நகரினுள்ள மன்னர்க்கு மதிகசூரன்
தளங்களும் புடைகள் சூழத் தாண்டியே கொக்கரித்து
உளங்களும் சினத்தும் பொங்கி யொளிபெரும் பகழி யேந்தி
கிளம்பியே அதட்டி மச்சகெர்ப்பனும் வருகின்றனே.



தரு

மச்சகெர்ப்பசூரன் வந்தானே அதிவுக்கிரமாக
மச்சகெர்ப்பசூரன் வந்தானே

மச்சகெர்ப்ப சூரன் வந்தான்
மன்னும்பலபணி மின்னுங்குலிங்கிட
அச்சமற்றிப்போ திங்கேவாரவன்
ஆரென்றறியவே வீரம்பேசியே (மச்)

அக்கினிக்கோட் டையைத்தாண்டி
ஆருமணிகிடா ரென்றிருந்திட
உக்கிரமாகவே வாரவன்தனை
ஒடியடிக்கிறேன் தாடைதனிலென்று (மச்)

என்னுடபலத்துக் கீடோ
இந்திரதேவரும் சந்திரசூரியர்
மன்னவனென் றுலுங்காலே
வாரியடிக்கிறேன் பாருமென்றுமே (மச்)

கொக்கரித்துத் தோளைத்தட்டியே
கோடையிடியைப்போற் சாடைகாட்டியே
மிக்கவே கெம் பீரத்தோடு
விண்ணுமதிரவே கண்ணையுருட்டியே (மச்)

## மச்சகெர்ப்பன் கவி

ஆரடா நீயுமிங்கே அச்சமில்லாமல் வந்தாய்
ஊருடன் பேர்தா னென்ன ஒண்டியாய்த் தனித்து வந்தாய்
கூரடா கூருவிட்டாற் கொல்லுவேன் நில்லு நில்லு
சேரடா வுன்பதிக்குத் திரும்படா திரும்புவாயே.

## வசனம்

ஆரடா அதிவேகமாகப் போகிறவன் ஊரடா உன்பேரடா எனக்குக்கூரடா உன்னைக் கொல்லுவேன் உயிர் பிழைத்து உன் பதிக்குச்சேரடா திரும்படா திரும்பு.

## அனுமார் தரு

## இருவருக்கும் தர்க்கம்

திரும்புமென்றுசொல்லும் தீரமென்னடா
துரும்புக்குச்சமதையோ சொல்லடா பயலே (திரு)

## மச்சகெர்ப்பன் தரு

பையலென்றுசொல்லி பலங்கூறவந்தாயே
கையினலேவுன்னைக் கசக்குவேன்படையிதோ (பை)

## அனுமார் தரு

படைகளெல்லாம் வாலாற் பற்றிச்சுழற்றிமோதி
மடிபடஅடிப்பேனே வழிமறிக்காதே (ப)

## மச்சகெர்ப்பன் தரு

மறிக்காதேயென்றுநீ வல்லமைபேசாதே
தறிக்கிறேன்தலைவிழச் சரந்தொடுத்தேனே (மறி)

## அனுமார் தரு

தொடுத்தகணையைக் கையாற் பிடித்துமுந்தனையிப்போ
தடுத்தேனேயென்வலு அறியடாபயலே (தொ)

## மச்சகெர்ப்பன் தரு

அரியும்அடங்கியொரு ஆனைக்கஞ்சுவதுண்டோ
சொரியுறேன் கணைமாரி சோடுசோடாகவே (அரி)

## அனுமார் தரு

சோடாகயென்மீதிற் சொரிந்தகணையுங் கத்தி
ஒடிஉன்கைவில்லை ஒடித்தனேபுத்தி (சோ)

### மச்சகெர்ப்பன் தரு

பத்திஒடித்தபோது பளுவாகத்தோள் தட்டிக்
குத்தினேன்உன்உடல் குடல்களுஞ்சரி (பத்)

### அனுமார் கவி

குத்தினேன் நானுமென்று கூறிய பயலே கேளாய்
சுத்தவீ ரருமெனக்குத் தோற்றுமே போவ தல்லால்
வெற்றிகள் செய்வ துண்டோ வில்லம்பு கெதைவா ளான
மத்ததும் வேண்டா மிப்போ மல்லுக்கு எதிர்த்து வாடா.

### வசனம்

அடாவாடா பயலே என்னைக் குத்தினேனென்று வீரியம் பேசாதே வில்கெதை முதலான யுத்தத்தை நிறுத்தி மல்யுத்தஞ்செய்ய வல்லவனானல் என்முன்னே எதுத்துவாடா பயலே.



### மச்சகெர்ப்பனுக்கும் அனுமாருக்கும் சண்டை

### முகாரி அடதாளச் சாப்பு

மல்லுக்குநீவாடா சிறுகுரங்கே யிங்கு
வாரியடிப்பேண்டா சீரியேயுன்னை

### அனுமார் தரு

கொல்லுகிறேன்நில்லடா கைக்
குத்துக்குவாடா வெற்றிபெற

### மச்சகெர்ப்பன் தரு

வெற்றிக்கு நீவாடா வென்று
விருதுகள்பேசிய சிறுகுரங்கே

### அனுமார் தரு

குத்துக்கொருகுத்தைக் குத்தினேன்
குத்தியேரத்தமுங் கக்கிடவே

### மச்சகெர்ப்பன் தரு

கக்கிநெக்கிடவே குடல்களும்
காட்டியவீரமுத் தாட்டியுடன்

### அனுமார் தரு

மிக்கவோர்குத்து குத்தி உன்னை
விண்ணிலெரிந்திட வெண்ணினேனே

### மச்சகெர்ப்பன் தரு

கொன்றிடப்பூவில்வந்து குதித்துக்
கூரியகாலையும் வாரியுமே

### அனுமார் தரு

நின்று காகரென்று சுழற்றி
நிலத்திலடித்தேன் பலத்துடனே

### மச்சகெர்ப்பன் தரு

பெலத்தி லதிவீரனும் என்கை
யிடித்தா லனுத்து மடித்திடுவேன்

### அனுமார் தரு

அலுத்துநான் போவதுண்டோ உன்னை
அடிக்கிறேன் நீயும் திடுக்கிடவே

### மச்சகெர்ப்பன் தரு

திடுக்கிடதேமலையை வாரிக்
சீக்கிரமாயுன்னைத் தாக்கிடுவேன்

### அனுமார் தரு

அடுக்குறேனென்றின்மே லொன்றாக
அடுக்கியேவுந்தன்மேற் போட்டிடுவேன்

### மச்சகெர்ப்பன் தரு

போட்டமலைகள் தனைச் செந்தாமப்
பிடித்துமேஉன்னை அடித்திடுவேன்

### அனுமார் தரு

வாட்டக்குறங்கேயென்முய் எத்தாள்
வல்லமையாலுன்னை கொல்லுவேன்பார்

### மச்சகெர்ப்பன் தரு

பாரடாளந்தன்வீரம் பற்றிப்
பரமருமகிழுவார் சிறுகுரங்கே

### அனுமார் தரு

கூரடாபேர்குலமும் சொல்லிக்
கொல்லவும்வுண்டோ வல்லமைகள்

### அனுமார் வசனம்

வாரும் பிள்ளாய் சூரனே நானேவந்து ராவணாதிகளுடனே அநேக யுத்தஞ் செய்து இருக்கிறேன் உன்னைப்போல் என்முன் னின்று யுத்தம் செய்தவர்களைக் காண்கிலேன் இப்பவும் உன்னிடத் தில் அடிப்பட்டு நொந்தேன் நீயார் உன்குலமென்ன உனதாய் தகப் பனர் இதுகளை யெல்லாம் தெரியச் சொல்லவேண்டு மப்பா சூரனே.

### மச்சகெர்ப்பன் வசனம்

கேளாய் வீரனே படுகளத்தில் ஒப்பாரியுண்டோ என் குலத்தை நீ அறிகிறதென்ன வல்லவனுனல் என்னுடனே எதிர்த்துவா வல் லமை யில்லாவிட்டால் வந்தவழியே ஓடிப்போடா சூரனே.

### அனுமார் வசனம்

கேளாய் சூரனே என்மீது தயவுவைத்து உன்குலங் கோத்திரங் களைச் சொல்லிவிட்டால் பின்னுல் யுத்தஞ் செய்யலாமப்பா சூரனே.

### மச்சகெர்ப்பன் கந்தார்த்தம்

என்னிட குலந்தான் கேளு மினையிலா வாய்வுதேவன்
அன்னளில் அவனே வந்து அஞ்சனு தேவியான
கன்னிகையைக் கலந்த போது கருவாக அவதரித்த
மன்னவன் அனுமந்தற்கு.

### தரு

மைந்தனுன் வீரசூரனே அனுமந்தற்கு
மைந்தனுன் வீரசூரனே

மைந்தனும்என்பேர் மச்சகெற்பன்
வந்துசொன்னேன் வாரும்போருக்கு மை

## அனுமார் கந்தார்த்தம்

அனுமந்த ருக்குப்பிள்ளை யாகுமென் றுரைத்தாய் நீயும்
கனமான தேவியேது கலியாண மானதேது
மனதிலே கர்மியான மாதர்க ளாசையேது
நினைவிலே நினைப்ப தேது.

## த ரு

நித்தியப்பிர்மாச்சாரியவரே ஓமச்சகெற்பா
நித்தியப்பிர்மாச்சாரியவரே
நித்தியப் பிர்மாச் சாரியுமவரே
பெற்றிடும் விபரமும் பேசுவீரறிய

## மச்சகெர்ப்பன் கந்தார்த்தம்

சேயிழை மொழிப் படிக்குச்சிவந்த சூரியனைக் கவ்வப்
பாயவே அனுமதேவன் பாரிய தேக வேர்வை
சாயவே சமுத்ர மச்சந் தன்னுடவாயிற் புக்கி
நாயகனுகி வந்து.

## த ரு

நான்கரைதனிலொதுங்க குழந்தையாகி
நான்கரைதனிலொதுங்க
நான்கரையொதுங்கிட ராவணனெடுத்திங்கு
தேன்மொழிதீவர்ண மாலையும்வளர்ந்திட நா

## அனுமார் கந்தார்த்தம்

அப்பனே சொல்லக் கேளாய் அஞ்சன தேவியாற்குத்
தப்பித மில்லா மைந்தன் சமர்த்துள்ள அனுமார்நானே
செப்பின மொழிக ளெல்லாம் சொல்வேன் சரிதானிப்போ
ஒப்புவாய் நானுந் தந்தை.

## த ரு

யோசனை வேறுமில்லையே அப்பாமகனே
யோசனை வேறுமில்லையே
யோசனைசெய்யவும் உண்டோவேறினி
பாசமானஎன் பாலனேவாடா யோ

## மச்சகெர்ப்பன் வசனம்

கேளுமையா சுவாமி நான் பிறந்த விதங்களெல்லாம் மயில்ராவணனுக்கு முனியீஸ்பரர்வந்து ஒருநாள் சொன்னர் அதினல் உனக்

குத் தெரிந்து சொன்னேன் இப்பவும் நீர் அனுமாரென்று சொல்வது சந்தேகமா யிருக்கின்றது அனுமாரோ விஸ்வரூபி அப்படி விஸ்வரூப மெடுத்துக் காண்பித்தால் நம்புவேனையா சுவாமி.

அனுமார் வசனம்

கேளுமப்பா பாலகுமாரகா அப்படியே இதோ விஸ்வரூப மெடுத்துக் காண்பித்து அடங்கினேன் நாம் இருவரும் மனது சந்தோஷமானோம் அதுவுமன்றியில் நான் ராமலட்சுமண ரிடத்தில் தூதுவனுகயிருந்தும் ராவணசம்மார முடிவிலே மயில்ராவணன் வந்து சுவாமிகளிருவரையும் எடுத்துக்கொண்டு வந்து காளிக்கும் பலி கொடுக்கப்போகிறுன் அதற்குள் சுவாமியை மீட்டுக்கொண்டுபோக வந்தேன் எனக்கு வழிவிடவேண்டும் பாலகா.



மச்சகெர்ப்பன் தரு

இருவருக்கும் தர்க்கம்

உன்னுடகோபக்குருமையாகுதே என்னுடஅரசற் ஓ அய்யா உமக்கு கிடர்நினைப்பேனே

அனுமார் தரு

நினைக்கவேண்டாம் நேசம்வையடா துணிக்கவல்லவா அட அப்பாமகனே சொல்லிவழிவிடும் (நீ)

### மச்சகெர்ப்பன் தரு

விடுவதேதுஉயிரளவிலே ஓ அய்யா எந்தனை
மடியச்செய்து வழியைத்தாண்டுவீர் (விடு)

### அனுமார் தரு

தாண்டிப்போகத்தயவுவையடா அடஅப்பாமகனே
யேண்டாவுனக்கு இந்தக்கொடுமைகள் (தா)

### மச்சகெர்ப்பன் தரு

இந்தவார்த்தை பேசலாமோ ஓ அய்யா யிங்கு
உந்தனைவிடநீதி யாகுமோ (இந்)

### அனுமார் தரு

நீதியல்ல உங்களரசனை அடா அப்பாமகனே
சூதுசெய்து துணிக்கவல்லையே (நீதி)

### மச்சகெர்ப்பன் தரு

வல்லதந்தைநீஎனக்கானல் ஓ அய்யா எந்தனை
வெல்லவுமக்கு வீரமிருக்குமே (வல்)

### அனுமார் தரு

வீரமிருந்தால்வெல்லமைந்தனை அடஅப்பாமகனே

### மச்சகெர்ப்பன் வசனம்

கேளுமையா தந்தையே என்னை சிறு குழந்தையிலே எடுத்து அருமையோடு வளர்த்த தந்தையாருக்கு துரோகம் செய்தால் நானை நான் எந்தகெடுதி அடைவது நீர் யீன்றதந்தை யென்றலும் உன்னை மனந்துணிந்து விடமாட்டேன் உனக்கு சாமர்த்தியமுண்டானல் என்னை செயித்து இந்த கோட்டைவழியைத் தாண்டலாமையா சுவாமி.

### அனுமார் கவி

பாங்குடன் மச்சகெர்ப்பன் பகர்ந்திடும் மொழியைக் கேட்டு
ஆங்காரக் கோபமாகி அண்டமும் அளாவி நின்று
ஓங்கியே அடிக்க மைந்தனுடன்விழ லவனை விட்டு
நீங்கியே அனுமதேவன் நெடுந்தோலை வேகி னரே.

### வசனம்

இவ்விதமாக நீதி வார்த்தைகளைச் சொன்ன மச்சகெர்ப்பனைப் பார்த்து அனுமாருக்கு உக்கிரகோபம் பிறந்து விஸ்வ ரூபங்கொண்டு அண்டமளாவி நின்று ஆக்கரித்து காத்தைவோங்கி மச்சகெர்ப்பனை

மார்பில் அடித்தபோது மூர்ச்சித்து விழுந்தான் அத்தருணத்தில் அனுமார் அதிகவேகமாக அக்கினிக்கோட்டையைத்தாண்டி நெடுந் தூரம்போக அவ்விடத்தில் சிங்காரவனமும் மகா விச்சித்திரமான தாமரைத் தடாகமும் கண்டுபோகையில் அத்தடாகக் காவலாளி களான ஆயிர மல்லர்கள் இருக்கக்கண்டு அவர்களையறியாமல் சிங்காரவனத்தி லேறினபோது மரங்களசைய காவலாளிகள் கண்டு ஓடி வருகிற விதங்காண்க.

## மல்லர் தரு

தட்டி சல்லடமும் கச்சை தரித்திடும் பிகுவெடுத்துக்
கட்டரியுடைவாள் பூண்டு கைதனி லம்பு வில்லும்
திட்டமா யலங்கரித்துச் சிங்கார வனத்தை நாடி
மட்டிலா வலுமைபெற்ற மல்லர்கள் வருகின்றாரே.

## மல்லன் தரு

### நொண்டிச்சிந்து

ஆரடா மல்லர்களே ஒருகுரங்கு
அதமதுசெய்குது மதமுடனே
பாரடாமாமரங்கள் வனத்தையும்
பத்தியொடித்துக்கிளை யத்துவிழவே

சின்னபின்னம் செய்குதுபார் ஒருகுரங்கு
சிங்காரவனமதி லெங்குமோடியே
மன்னன்மயில்ராவணனும் இதையறிந்தால்
மட்டில்லாச்சினமாகி வெட்டுவாரே

சூரமும் பழுதாமோ அரசர்முன்னே
துண்டனைப்பிடித்தவனைக் கொண்டுவருவோம்
தீரமும்பழுதாமோ இவனை
தட்டெனப்பிடித்துக்கையாற் கட்டியிழுங்கோள்

தாண்டிக்குதித்துப்பார் மரங்களைத்
தள்ளித்தள்ளித்துள்ளியது ஓடுதுபார்
என்னடாமடப்பயலே நீங்கள்
எல்லவருமோடியிதைக் கொல்லுங்கடா ஆர

## பொது வசனம்

இப்படியாக மல்லர்கள் ஆக்கிரமித்து ஓடி வருகிறபோது அப்போ அனுமாரானவர் பூமியில் குதித்து வாலைநீட்டி ஒரு கை யாலே பிடித்துக்கொண்டு எதுக்கிற விதங்காண்க.

### அனுமார் தரு

மல்லர்களே அடா புல்லர்களே முன்னே
வாருங்களே வீரம்பாருங்களே
மல்லர்களையெல்லாம் கொல்லுகிறேனிப்போ
வாலையுமேளந்தன் காலையுமே (மல்)

### மல்லர் தரு

பாடடாவென்றிங்கு ஆரடாசொல்லிங்கே
பகைத்திடவேளங்களை வரைத்திடவே
தீரமுண்டோ வெகுவீரமுண்டோ உன்னை
சிதறடிப்போம்மத பதறடிப்போம்(பார)

### அனுமார் தரு

அடிப்பதுவோயென்னை மடிப்பதுவோ தீரம்
அடவனடாயெல்லாம் தெரிவனடா
மடிப்பது வோயெல்லாம் துடிப்பதுவோபின்னு
லறியடாசிந்தை தெரியடா (அடி)

### மல்லர் தரு

தெரியாதோவீரம் அறியாதோமொழி
சொல்லாதேமுன்னே நில்லாதே
பெரிதாமோகொல்ல அரிதாமோ உன்னைப்
பிடித்திடுவேகம்வெட்டி மடித்திடுவோம் (தெ)

### அனுமார் தரு

மடித்திடவோவாளால் பொடித்திடவோ கிட்டி
வந்திடவோநீங்கள் நொந்திடவே
பிமத்திடவோ சுற்றி யடித்திடவோ
பீரிடவோ இதோ மேவிடவோ (மடி)

### மல்லர் தரு

யாருக்குமேளங்கள் வீருக்கிமே நடுங்கா
தடித்தாயே யுயிரை மடித்தாயே
போருக்குமேஅடங்கா வீரருக்குமேதிடம்
போக்குவென் தூலாய்த் தாக்குவென் (ஆரு)

### அனுமார் தரு

தாக்கிடவேவாலைத் தூக்கிடவே அதை
தட்டினனே உன்னை கிட்டினனே
போக்கினனேசுத்தித் தாக்கினனே
நீருப்பொடித் தானே ஆகமடித்தானே (தா)

### மல்லர் தரு

ஆகாதுவெல்லப்போகாது இந்த
ஆணுவமேஅதை காணுவமே
ஏகுவமே கிட்டிபோகுவமே உன்னை
எட்டுவமே இறைமுன்னே வெட்டுவனெ (ஆ)

### அனுமார் கவி

பாரிய மல்லரெல்லாம் பதைபதைத்திட வாளால்
வாரியேசுழற்றி யோங்கி வயித்திலடித்துக் கொல்லப்
பீரிடரத்த மெல்லாம் பிரளயக் குருதி நீராய்
ஆறுமே பெருகி யோட அவ்விட மிருந்திட்டாரே.

### வசனம்

இப்படியாகக் குளக்கரைக் காவலிகளான ஆயிரம் மல்லர்களை அனுமார் வாலினுலே சுற்றித் தரையிலடிக்க உதிரங்கள் பெருகி யோடப் பிரேதங்களை மச்சங்கள் விழுங்க இரைகொடுத்து அவ்விடத்தில் நிலவரமறிய அனுமார் குளக்கரையில் இருக்க இப்பால் மயில் ராவணன் தன் மந்திரிமார்களைப் பார்த்துச்சொல்லுகிற விதங்காண்க.

### மயில்ராவணன் கவி

கெடிகனெனும் ஊசிமுக் குடையாய் கேளாய்
கீர்த்தியுள்ள வெனதுதங்கை யீன்ற மைந்தன்
வடிவுடைய சுபகேது வளரும் நாளில்
வாணிவந்து றிவனெனது முடிபெற்றுன்
உடையவனு னென்றுரைக்க விலங்கு பூட்டி
ஒளித்தரையில் வைத்து அவன் பிதாவைக்கொன்றேன்
துடித்திடவே பலிகொடுக்க வேண்டு மிப்போ
தூரதண்டி தனையழைத்து வரச்செய் வயே.

### வசனம்

கேளுங்கள் மந்திரிமார்களே எனது தங்கையாகிய தூரதண்டி யென்பவளுக்கு சுபகேதென்ருெரு பிள்ளைபிறந்து விளையாடுகிற காலத்தில் ஆகாயவாணிவந்து இந்தச்சுபகேது உனக்கு சத்துருவான வன் உனது ராச்சியத்தை ஆளும்படி யோகவானுகப்பிறந்து இருக்கிருனென்று சொல்ல அந்த க்ஷணம் அவனுடையபிதாவை வெட்டியெரிந்து என் தங்கையை பூட்டி சிசுவதைசெய்யலாகாதென்று சுபகேதுவையும் விலங்கு பூட்டி சிறையில் வைத்து வந்தேன் ஆகையால் இன்றையத்தினம் இராமலட்சுமணர் இருவருடன் சுரகேதுவையும் காளிக்குப் பலிகொடுக்கவேண்டும் காளிகாதேவிப்பூசைக்குப் புது ஜலங் கொண்டுவரத் தக்கதாக எனது தங்கையான தூரதண்டிகையை அழைத்துவாருங்கள் மந்திரி மார்களே அந்தச் சமயம் தூரதண்டி வருவது காண்க.

## தூரதண்டிகை வருவது

### விருத்தம்

சிந்தையும் மிகக் கலங்கித் திகைத்திட மாதெழுந்து
விந்தையா பரண மின்ன விலங்குமே காலிலாட
மந்திரி வசனங் கேட்டு மயிலனைக் காண வேண்டிச்
சுந்தர வதன தூர தண்டியும் வருகின்றாளே.

### தூரதண்டிகை தரு

சுந்தரவதன தூரதண்டிகைவந்தாள் ஒய்யாரமாக
சுந்தரவதன தூரதண்டிகைவந்தாள்
சிந்தையும்வாடித் தேகமுங்கருகிச்

சுருள்

சந்திரவதன முகமுமிலங்கிட
விந்தையாய்ப்பணிகளும் மின்னிக்குலுங்கிட (சுந்தர)
கையினில்தங்க வளையலாட
கண்டவராதியென்றுபுகழ்ந்துக் கொண்டாட

சுருள்

மெய்தினிற்பணிகளும் குலுங்கியே ஆட
மெல்லியருடலமும் மெலிந்துமேவாட (சுந்தர)
காலினில்விலங்குகள் கலீர்கலீரென்னக்
கட்டியேசேலையும் சரிகைப்பளபளென்ன

சுருள்

பாலிநவகுண சாலியுமென்ன
பாவைக்குமிந்தவிதி வந்துதேளன்ன (சுந்தர)
மந்திரியழைத்திடும் மர்மமறியவே
மயில்ராவணனுட மனமதுதோயவே

சுருள்

இந்திரதேவர்கள் தன்னிலும்பெரிய
யின்பமானசபை யோர்களுமறிய (சுந்தர)

### தூரதண்டிகை கூறு விருத்தம்

மேதினியாளும்
சகோதரா கேளும்
ஏதெனை யழைத்த
சேதியை யுரைப்பாய்

### தூரதண்டிகை வசனம்

கேளாய் சகோதரனுகிய மயில்ராவணு என்னையழைத்த காரியம் இன்னவிதமென்று சொல்லவேணும் மயில் ராவணு.

### மயில்ராவணன் கவி

தத்தியே நடந்து வந்த தங்கையே கேளு மூந்தன்
புத்திரன் ராமன் தம்பி புனிதரைப் பலி கொடுக்க
வெற்றிசேர் கோட்டை தாண்டி வெள்ளியின் குடங்கொண்டே
பத்தியாய் ஜலத்தை மொண்டு பரிவுடனெடுத்துவாராய்.

### வசனம்

கேளும் தங்கையே அயோத்தியாபுரி ராமலட்சுமணனுடன் உன் குமாரனையும் காளிக்குப் பலியிடுவதாக யோசித்திருக்கிறேன் அதற்காக நீகோட்டைக்கு வெளியில் இருக்கும் தடாகத்திற்குப் போய் வெள்ளிக்குடத்தில் காளிகாதேவி பூசைக்குப் புதுசலங் கொண்டுவாருந் தங்கையே.

### பொது வசனம்

இவ்விதமாகத் தூரதண்டி மகாகஸ்திகளடைந்து வெள்ளிக் குடங்கொண்டு சலந்திரட்ட வருகிற விதங்காண்க.

### தூரதண்டிகை தரு

யென்னமாய்த்துணிவேனடா மகனே உன்னை
யென்னமாய்த்துணிவேனடா
யென்னமாய்த்துணிவேனடா என்னுடபாலனே
சின்னவயதினில் உன்னைப் பலிகொடுக்க (என்)

காலன்வந்தடுத்தானே மகனே உன்னை
காலன்வந்தடுத்தானே
காலன்வந்தடுத்தானே வாலவயதிலுன்னைச்
சூலிகாளிக்குச்சிறு பாலனைப்பலியிட (எ)

எப்படிமனந்தரிப்பேன்
யெப்படித்துணிவேனடா செப்பியபாலனே
ஒப்பியேகாளிக்கு அப்பனேபலியிட (எ)

சிசுவதைசெய்வானே மகனே உன்னைச்
சிசுவதைசெய்வானே
சிசுவதைசெய்வானே அசைவில்லாத்தீரனும்
நிசமுடனுரைத்தது பிசகென்றுதடுப்பேனே (எ)

## தூரதண்டிகை கவி

விலங்குகள் பூட்டி யுந்தன் வீரமுங் குன்றி வாடத்
தலையுறு மெழுத்தோ வென்று கசிந்துநான் வந்தேன் பாலா
இலகிய மகனே வுன்னை யின்றுமே ராம ரோடு
பலியிட வுரைத்தசேதி பாவிநா னறிகிலேனே.

## வசனம்

ஐயையோ மகனே நீ அறியாத சிறு வயதில் உன்காலில் விலங்குபூட்டிக் காவல்வைத்து வந்த நாள்முதல் உன்விதி யிப்படி யோவென்றுவாடி நொந்தேன் இன்றைக்குப் பரப்பிர்ம சொரூப மாகிய ராமலட்சுமணருடனே உன்னையும் காளிகாதேவிக்குப் பலி யிடுவதாகச்சொன்ன வார்த்தைக்கு என்னுயிர்மெலிந்து வாடுகிற வருத்தந்தீர யார்வந்துதவப் போகிறார்கள் என்ன செய்வேனடா என்மகனே.

## தூரதண்டிகை புலம்பல்

என்னசெய்வேன் என்னசெய்வேன் எந்தன்பாலனே உன்னை
இன்றுகாளிக்குப்பெலிகொடுத்திட யெப்படிதுணிவேன்

உன்னையிழந்துநானுமிந்த உலகிலிருப்பேனோஇப்போ
ஓடிசலம் எடுத்துவரவே வாடிப்போகுறேன்

காளிமுன்னேஉன்னைநிறுத்தி வாளையோங்கிடஅதை
காணமனதினில் என்னென்னவிதம் தோணுமோ மகனே

தாளாதெனக்குவாடினால் பயம்யேதுமில்லையேயிப்போ
தடுக்கஉனக்கு கெதியில்லாமல் போனபோதிலும்ராமர்

லக்ஷ்மணரிருவருக்கு ஆருமில்லையே இப்போ
நாடிஅவரைதேடிவருவார் நானறிகிலேன் ஐயோ

ஆருமோமகனேநீயும் பாவியானபோதிலும் மகனே
அருமைராமர்தம்பிலட்சுமணர் அவருக்கும்பாவியோ

தேம்பிவாடுறேன் மகனே உன்னுடன் தசரதன்மைந்தரால்
சிரசைத்துணிக்கமலரயனார் சென்னியில்லெழுத்தோ

சாம்புவநீலன்குமுகன் அங்குதன் அனுமான் எங்கையோ
சுவாமியைவிட்டுப்பிரிந்துபோனாரோ சற்றுமறிகிலேன்

## தூரதண்டிகை சொல்லுவது

## விருத்தம்

பக்ஷமா யீன்ற மைந்தா பாவியும் நீயென்றாலும்
கஷ்டமும் அடையுமந்தக் கனவான்கள் பாவி தானே

இஷ்டமா யுன்னைக்காக்க எவர்களு மில்லையென்றாலும்
துஷ்டனைக் கொல்லச் சுவாமி தூதன்வந்ததவெ ளாதோ

### வசனம்

அப்பாமகனே நீதான் பாவியான போதிலும் அந்தராமலட்சு மணர் பாவிதானே எனக்குத் துணையெவருமில்லாமற் போன போதிலும் ராமலட்சுமணர் இருவருக்கும் ஆருமில்லையோ அந்த சுவாமிக்கு அநேகம் பலவான்க ளிருந்தும் உடந்தையாக மகா வீரபராக்ரம சூரனாகிய அனுமார் இருக்கிறார் ஆருதவாவிட்டாலும் அனுமாராவது வந்து இவ்வேளை உதவக்கூடாதோ அப்படி யாவருக்கு சுவாமி அநேகம் கொடுமைசெய்தாலும் இவ்வேளை அதை எண்ணலாமோ அர்த்தராத்திரியில் காலில் விலங்குடனே வருகிறேன் இவ்வேளை முன்னின்று ரக்ஷியும் ரகுநாதா முகுந்தா கோவிந்தா வைகுந்தவாசா வந்தனம் வந்தனமையா சுவாமி.

### அனுமார் தரு

அஞ்சாதேதாயே யாதொன்றுக்கும்
அஞ்சாதேதாயே

அஞ்சாதேஉன்மனம் சஞ்சலமதுவென்ன
கொஞ்சமும் ஒளியாமல் வஞ்சியேநீசொல்லும் (அ)

வருத்தப்படுவதென்ன வாய்விட்டழுவதென்ன
ஒருத்திதனித்துஇங்கே ஓடிவந்ததைச்சொல்லும் (அ)

காலினில்விலங்கென்ன கையினிற்குடமென்ன
ஓலமிட்டழுதுநீ ஒண்டியாயேன்வந்தாய் (அ)

மகமேருதுயரது வந்தாலும்அணுவுக்கு
நிகரேதுஇனிமேலே நீமனங்களித்திடும் (அ)

### அனுமார் வசனம்

வாரும் அம்மணி நானே அனுமான் நீயார் உன்பேரென்ன நீகஸ்தியடைய உனக்கு வந்த விபரீதமென்ன அர்த்தராத்திரியில் நீதனித்துவந்த காரணமென்ன உன்காலிலே விலங்கென்ன யாதொன்றுக்கும் அஞ்சாமற் சொல்லுமம்மா தாயே.

### தூரதண்டி கவி

ஒருகுறை யுலகி லுண்டா முடன்பிறந் தவன்றன் னாலே
சிறுபிள்ளை யவனே டென்னைச் சேர்விலங் கதனைப் பூட்டி
மறுதேச ராமர் தம்பி மைந்தனைக் காளிக்கீய
இருளினிற் சலமெடுக்க விங்குநா னழுது வந்தேன்.



### தூரதண்டி வசனம்

கேளும் அனுமந்தரே நானே மயிலிராவணன் தங்கை என் பேரோ தூரதண்டி எனக்கு அருமையான பிள்ளையொன்றுண்டு அதற்கும் எனக்கும் விலங்குபூட்டி இன்றுராத்திரியிற் கொண்டு வந்த ராமலட்சுமணருடனே என்மைந்தனையும் காளிக்குப் பலியிடுவ தாய் என்னை அபிஷேகத்திற்குச் சலங்கொண்டுவர அனுப்ப வந் தேன் எனக்குப் புத்திரபாக்கியம் போகுதென்று அழுகிறேன் உன்னாலே ஆவதென்ன போம்போம் அனுமந்தா.

### அனுமார் தரு தர்க்கம்

என்ன மாயுரைத்தாய் அம்மணி    என்னயெளிதாய்
என்ன மாயுரைத்தாய் அம்மணி
என்னமாய்உரைத்தாயம்மா    இந்தக்கோட்டைக்குள்ளேசென்றால்
மன்னவன்முடியையவாங்கி    உன்மகனுக்கே அளிப்பேன்

### தூரதண்டிகை தரு

அளிப் பேனென்று சொல்லுகிறாய்    என்மகனுக்குப்பட்டம்
அளிப் பேனென்று சொல்லுகிறாய்

அளிப்பேனென்று சொன்னால்    அதிபலராட்சதர்கள்
வளைப்பாருனையெப்படி    வாசல்தாண்டிக்கொண்டுப்போவேன்

### அனுமார் தரு

கொண்டுபோகவேண்டுமம்மா    எவ்விதத்திலும்
கொண்டுபோகவேண்டுமம்மா
கொண்டுபோனாற்கோட்டைக்குள்    குறைகளைதான் தீர்ப்பேன்
கண்டறிவாயென்னுடைய    காரியப்பின்னாலேநீயும்

### தூரதண்டி தரு

பின்னேவரலாமோநீயும் அனுமந்தாயென்
பின்னேவரலாமோநீயும்
மன்னர்கள்தராசில்வைத்து உன்னையும் யென்னைநிறுக்க
தன்னுலுளவறிந்தே சத்துருவைக்கொல்லென்பார்கள்

### அனுமார் தரு

சத்துருவைக்கண்டாலஞ்சுமோ யானைக்குச்சிங்கம்
சத்துருவைக்கண்டாலஞ்சுமோ
சத்துருவைக்கண்டாலென்ன தாயேநீ அதற்கஞ்சாதே
வெத்திசெய்துவாலால்சுத்தி மொத்தியறைவேன் அவரை

### தூரதண்டி தரு

அவர்பலந்தனையறியாயோ அனுமந்தாநீயும்
அவர்பலந்தனையறிவாயோ
அவரையெளிதாவெண்ணி ஆசைவார்த்தைசொல்லவேண்டாம்
சிவனென்ருலும் இங்கேநில்லும் சேதியைசொல்லென்றுகேட்பார்

### அனுமார் தரு

பாருமெந்தன் வல்லமைகளை அம்மம்மா அங்கே
பாருமெந்தன் வல்லமைகளை
பாருமெந்தன்வல்லமையை பலமானராட்சதரை
மேருகிரிதன்னைக்கையால் வாரியேமோதி அடிப்பேன்

### தூரதண்டி தரு

அடிப்பேனுனென்றுசொல்குறீர் அனுமந்தாநீயும்
அடிப்பேனுனென்றுசொல்குறீர்
அடிப்பேனுனென்றுசொன்னீர் அனுமந்தா நீயும்யாரோ
கெடுப்பாயோகாரியத்தைக் கிட்டப்போகஎட்டநில்லு

### அனுமார் கவி

கொடுப்பனென் றுரைத்த மாதே கீர்த்தியும் பலமுங்காண
எடுத்தநான் விஸ்வ ரூபம் எந்தனைப் பாராயம்மா

### அனுமார் வசனம்

கேளுமம்மா தாயே இன்னும் உனக்கு சந்தேகம் இருந்தால் இதோ விஸ்வரூப மெடுத்தேன் என்னுடைய பராக்கிரமத்தை பாரு மம்மா தாயே.

### தூரதண்டி கவி

கடுத்தநீ ராழி தன்னைக் கணத்தினிற் ருண்டி லங்கை
யடுத்தனை சீதாதேவி யம்மணி நமஸ்கரித்து

கெடுத்தனை யரக்கர்சேனை கிருமிசா யென்றுளத்தி லெண்ணி
எடுத்தனை விஸ்வரூப மினியெனை யாளு வீரே.

### தூரதண்டி வசனம்

என் அய்யனே அனுமந்ததேவா உன்னைவந்து அடுத்தேன் உன்னுடைய விஸ்வரூபத்தைக்கண்டு பயந்து கண்ணைமூடிப் பூமியிற் படுத்தேன் உன் சொரூபத்தை அடக்கிவாரும் அனுமந்ததேவா.

### பொது வசனம்

இவ்விதமாக அனுமார் விஸ்வரூபத்தை அடக்கி ராவணசம்மாரம் நடக்கும் விதங்களைச் சொல்லி கோட்டைக்குட் கொண்டு போகும்படிசொல்ல அப்போது தூரதண்டியானவள் வாராய் அனுமந்தா நான் சலம்மொள்ளுகிறேன் நீர்குடத்தில் அடங்குமென்ன அப்போது அனுமார் தூரதண்டிகை கால்விலங்கை யொடித்துப் போட்டுத் தண்ணீர் மொள்ளச்செய்து அனுமார் தவளைரூபமாய் குடத்திலடங்கத் தூரதண்டியானவள் சந்தோஷமாக வெள்ளிக் குடத்திற் சலமொண்டுக்கொண்டு கோட்டைவாசலை நாடி வருவது காண்க.

### தூரதண்டி தரு

வெள்ளிக்குடமெடுத்து வேடிக்கையாகவே
துள்ளிநடந்தாளே தூரதண்டி துள்ளிநடந்தாளே
மெள்ளநடந்திடும் விலங்கையொடித்தவள்
தள்ளிநடந்தாளே தூரதண்டி(தள்)

கண்ணீர்வடித்தமுகம் மின்னிச்சொலித்திடவே
களிப்பாய்நடந்தாளே தூரதண்டி(களி)

குண்ணுமுளங்களித்துக் கொடுஞ்சித்தமாவே
எண்ணிநடந்தாளே தூரதண்டி (எ)

ஆசையாய்மனதினில் அல்லல்நீங்கினதென்று
வீசிநடந்தாளே தூரதண்டி (வீ)

பாசமாய்ப்பாலனைப் பாதுகாப்பீரென்று
பேசிநடந்தாளே தூரதண்டி (பே)

வளையில்கலகலென்று வர்னஞ்சொலிக்கவே
வாராளேகடுகிதூரதண்டி வாராளேகடிகி
உளவாகஅனுமந்தன் தவளையாகவே
களவாகநடந்தாளே தூரதண்டிகளவாகநடந்தாளே

### வசனம்

இப்படியாகத் தூரதண்டி வருகிற எக்களிப்பை தராசுக் காவலாளியான தொந்திமல்லன் இடும்பாசூரன் கடம்பாசூரன் அனேக

ராக்ஷதாளும் கெர்ச்சித்துக்கொண்டு புயங்களைத் தட்டிக் கொக்க ரித்து ஆக்கரித்து வருவது காண்க.

காவலர் கவி

புரட்டுக்குத் திருட்டுக் கண்ணன் போருக்கு இடும்பா சூரன்
உருட்டுக்குக் கடம்ப சூரன் உளவுக்குத் தொந்தி மல்லன்
பிரட்டுக்குச் சொத்தப் பல்லன் வீரமாய்த் தூரதண்டி
வரட்டுமென் றுக்கரித்து வருகிறார் வருகின்றாரே.

த ரு

இடும்பன்கடம்பாசூரன் யீடில்லாச்சொத்தப்பல்லன்
கடும்பகையானமல்லன் கத்திகட்டுதொந்திமல்லன்
புரட்டுக்குத்திருட்டுகண்ணன் பூரணதிராணிமல்லன்
உருட்டிப்பல்லைக்கடித்து ஓடிவாரார்வீரமல்லர்
கொக்கரித்துத்தோளைத்தட்டிக் குதித்துக்குதித்துக்கொண்டு
திக்குகளதிரத்தாண்டி சினச்சிங்கம்போற்கெர்ச்சித்து
யிடிபோலாக்கிரமித்து இரண்டுமீசைமுறுக்கி
கடிகியேவேகமாய்க் காவலர்வாராரே

காவலாளி கவி

பரிமுத லான சேனை பாரிய தாசி லேறிக்
கரியெலாம் போன தேயிக் காரண மறிந்த தில்லை
தரையினில் தாழ்ந்த திப்போ சத்துரு வந்தான் போலும்
அரிவையாள் தூரதண்டி யவள்தனைச் சோதிப் பீரே.

வசனம்

கேளும் அண்ணமார்களே இந்தக் கோட்டை வாசலில் தராசு நிறுத்தி உயர்ந்த தராசுதட்டில் ஆனைசேனை பரிவாரங்களெல்லாம் ஏறிப்போனகாலத்தில் கட்டானது அழுந்தவில்லை இன்றைக்குத் தூரதண்டி தராசினருகில் வரத்தட்டானது பூமியில் விருந்தபடி யினாலே நமக்குச் சத்துரு வந்திருக்கிறார் இவளை விடாமற்சோதனை செய்யுங்கள் அண்ணமார்களே.

மல்லர் தரு

தூரதண்டியாளே நில்லடி வெகு
துடுக்காயிங்குவதந்தார் சொல்லடி

தூரதண்டி தரு

சொல்லென் றுவத்திடும் மல்லரே ஒரு
சூதுகளறியனடா புல்லரே

### மல்லர் தரு

அறிய அழுதுபோன மாதுநீ இப்போ
அஞ்சாமல்வந்ததேது சூதுநீ

### தூரதண்டி தரு

சூதுக்காரினுநல்லவே உங்கள்
துடுக்குப்பயந்துநான் சொல்லவே

### மல்லர் தரு

சொல்லடிவிலங்குடன் போனியே இப்போ
சும்மாவிங்குவர லானியே

### தூரதண்டி தரு

வானவர்நடுங்கிடும் சூரரே நான்
வரும்போதுதெரிந்ததே வீரரே

### மல்லர் தரு

தெறித்தவிலங்கு வீழ்ந்து போகுமேநீயும்
செப்பினமொழி நிஜமாகுமோ

### தூரதண்டி தரு

நிஜமதைப்பொய்யென்று வையுங்கள் இனி
நீங்கள்செய்வதெல்லாம் செய்யுங்கள்

### மல்லர் கவி

செய்யுங்க ளென்று சொல்லித் தீரமாய்ப் பேசுகின்ற
தையலைவிடவொ ணுது தலையி நீற்குடத்தைத் தாழ
வையென்று சொல்லி நீரை வடிக்கட்டி சோதித் தெல்லாம்
ஐயமும் அறவே நாமும் அறியலாம் அறியலாமே.

### வசனம்

கேளுங்கள் அண்ணமார்களே செய்வதைச்செய்யென்று தீரமாய்ப் பேசுகின்ற இவளை விடக்கூடாது தலையிலே இருக்கிற குடத்து நீரை வாங்கிவடிகட்டிச் சோதித்தால் சத்துருவைக்காணலாம் அண்ணமார்களே.

### பொது வசனம்

அப்போது குடத்து நீரைவாங்கி தரையிலே சாய்க்கத் தவளையான அனுமார் குதித்தோட அதைப்பிடிக்க மல்லர் ஓடிவர உள்வாசற்படியில் வந்து தவளைரூபம் நீங்கி அனுமார் சுயரூபமெடுத்து தூரதண்டியைப் பின்னுலே நிறுத்தி மல்லர்மீது அனுமார் எதுக்கிற விதங்காண்க.

### அனுமார் தரு

ஓங்கிவளர்ந்து வாலைநீட்டி
ஒருகையாலே பிடித்துக்காட்டி
வாங்கிக்கொண்டு சுற்றிச்சுழற்றி
வாரியடித்தா னனுமந்தன்

### மல்லர் தரு

அடித்தபோது குதித்துகுதித்து
ஆக்கிரமித்துப் பல்லைக்கடித்துக்
கடித்துத்துடித்து இரும்புலக்கையை
கடிகிச்சுழற்றி யெரியவே

### அனுமார் தரு

சுழற்றியெரிந்த இரும்புலக்கையைத்
துள்ளிக்குதித்துக் கையிற்பிடித்து
நிழற்றும்மல்லர் மண்டைசிதற
நிலைபார்த்தடித்துக் கொல்லவே

### மல்லர் தரு

கொல்லமல்லர்மீசை துடிக்கச்
கோடையிடிபோ லதட்டிப்பொங்கி
வில்லைப்பூட்டிக் கணைகளேவி
விருதுபேசி யெதிர்க்கவே

### அனுமார் தரு

எதிர்த்தபோது குதித்து அனுமான்
இருகரத்தினல் மல்லரைச்
சதைத்துப்பதற ஓங்கியடித்துத்
தரையிலுதிரம் பெருகவே

### மல்லர் தரு

பெருகவுதிரம் ஆருயோடப்
பிழைத்தபேர்க ளெதுத்துமே
கிருகிரென்றுசுழற்றி மல்லர்
சிரியைப்பிடுங்கி யெரியவே

### அனுமார் தரு

எரிந்தகிரியைத் துளாய்மோதி
யெடுத்துமல்லரைச் சுழற்றியே
விரிந்தராட்சதப் படைகளெல்லாம்
வீசிவாலால் அடிக்கவே

## மல்லர் தரு

அடுக்கஆயிரம் மல்லர்மடிய
அறிந்துராட்சதர் வெகுண்டுமே
துடுக்கையடக்கி நடுங்கச்சீறித்
தோளைத்தட்டி வருகவே

## அனுமார் கவி

வந்ததோர் அரக்கர் தம்மை வாலினுற் சுழற்றிமோதி
கந்து பாய்ந் தவரை யெல்லாம் கடிகியே விடாமற் கொன்று
சுந்தர வதன தூர தண்டியைக் கூட்டிக் கொண்டு
அந்தமாங் காளி தேவி யாலயம் புகுந்திட்டாரே.

## வசனம்

இவ்விதமாக அனுமாரானவர் கோட்டைவாசற் காவற்காரர்களான அனேக பலமுடைய ராட்சதர்களை ஒருவராவது தப்பினல் மோசமென்று எல்லாரையும் நிமைப்பொழுதில் சம்மாரம் செய்து தூரதண்டியை அழைத்துக்கொண்டு காளிகாதேவி ஆலயத்திற் போய்புகுந்து பெட்டி இருக்குமிடங் காணமல் அனுமாரானவர் காளிகா தேவியைப் பார்த்து சொல்லுகிற விதங்காண்க.

## அனுமார் தரு

காளிகையாலே ஒருவிண்ணப்பம் கேளுமையாளே
காளிகாதேவியே கருணைப்பா ரிவ்வேளை
தாளுமோவுன்னுட தமயனைப் பலிகொள்ள (கா)

ஒருபலிதனக்கிடு ஒருலக்ஷம்பலிதாரேன்
பெருமையாய்ஸ்ரீராமர் பேழையைநீதாரும் (கா)

அந்தரிகௌரிஅகோரி சுந்தரிநீலி
இந்தவேளையில் மனமில்லையோ சொல்லையோ (கா)

செல்வனுரைப்பது செவியிற்கேட்கவில்லையோ
வல்லவநீயென்ருல் வாரும்போருக்கிப்போ (கா)

## அனுமார் கவி

சத்திசா முண்டி காளி தன்னையே வருந்திச் சொல்ல
இத்தனை ஆலஸ் யந்தா ளேதுநீ செய்வ தென்ன
பத்தியேமடி பிடித்துப் பராபரி யிழுப்பே னுன்னைச்
சித்தமு மிரங்கி வந்தாற் சீருடன் வாழ்வா யம்மா.

## வசனம்

கேளும் அம்மணி இத்தனை நேரமாக அடியேன் சொன்னவார்த்தைக்கு மனமிரங்கி வராத அவசியமென்ன இனிமேல் உன்னுடைய

மடியைப் பிடித்து இழுப்பேன் சுவாமிகள் இருக்குதல் பேழையைக் காண்பிக்க வருவாயோ வரமாட்டாயோ பதில் சொல்லுங்காளியே.

### காளிவருகிற கவி

வருகிறேன் மகனே என்று மால்தனுக் கிளைய விந்தை
அரனெதி ராடுமாது ஆக்கரித் தெழுந் திருந்து
திரிசூலம் வாளு மேந்தித் திசைகளும் அதிரத்தாண்டி
சுரர்களும் நடுங்கக் காளி சுருக்கினில் வருகின் ருளே.

### காளி தரு

உக்ரதீர அகோர காளிவந்தாள்
உக்ரதீர அகோர காளி வந்தாள்
உலகிலதிபதி பலவர்நடுங்கிட
கலகலென்றுமே வளையல்கொஞ்சிட (உக்ர)

திக்குத்திசைகளும் கிடுகிடென்றிடவே
அதிரக்கையில் திகிரிசூலமும்
பகழியேந்தியே கருமணிபணிதககென்றிட
அண்டரண்ட மகண்டமண்டலமும்

வெடிக்கமீறி அதட்டியாக்கரித்துதட்டியாகவே
பதட்டமாகவே உதட்டைக்கவ்வியே
கண்டவீரர்கள் விண்டுமனமதுகலங்க வரும்
கரியைக்கண்டிடும் அரியைப்போலவே

கரமும்வெகுவிடம் பறவிவருகவும்
கோடாவித்தந்தங் கோழிமுட்டைக்கண்ணும்
நோக்கிகுலுங்க சடைகளும்
துலங்கபணிகளும் நலங்களாகிய

வாடாதமுகமும் உக்கிறமான சூலியிதோ
வந்துஅனுமந்தன் சிந்தைகளித்திட
விந்தைபேழையா தந்துவிடயெண்ணி
பட்டிடையில் கட்டுமாடைகள் இலங்க

இதோபண்டுமகிடனை வென்றநாணி
எட்டுத்திக்கும்மன்னர்கள் புகழ்ந்தேக்கையில்
மீசனேடெதிர் பேசியாடிய
மாசிலாபிரகாச சுந்தரி(உக்ர)

### அனுமார் கவி

ர்ாமலட்சுமணர் தம்மை ராவண னெடுத்துவந்தால்
தாமதப் பலியா யேற்கச் சம்மத மாமோ அம்மா

### காளி கவி

சாமியென் றறியே னப்பா சற்றிரு பேழைதன்னைத்
தாமித மில்லை தாரேன் சந்தோஷப் படுத்துவாயே

### அனுமார் வசனம்

சரணம் சரணமம்மா தாயே உமது தமயனாராகிய ராமலட்சு மணர்களை மயில்ராவணன் கொண்டுவந்து உனக்குப் பலிகொடுக்கநீ அவர்களை பலியேற்றுக் கொள்வது தர்மந்தானோ சொல்லுமம்மா தாயே.

### காளி வசனம்

கேளும் அனுமந்தா சுவாமிகளென்று நான் அறியமாட்டேன் இதோ பேழையைத் தந்துவிடுகிறேன் என்னை சந்தோஷப் படுத்திப் போகவேணுமப்பா அனுமந்தா.

### அனுமார் வசனம்

அப்படியே வேண்டுமென பலிகொடுக்கிறேன் வந்து எற்றுக் கொள்ளும் பேழையே ஜல்தியிற்றுருந் தாயே.

### இருவருக்கும் தர்க்கம்

### காளி தரு

சூரன்மயில்ராவணனுச்சே அனுமந்தா அவன்
சூரன்மயில்ராவணனுச்சே
சூரன்மயில்ராவணனும் வரவேளையாச்சுதிப்போ
போரவழிதனில்வந்தால் கூறுசெய்வானுந்தனையும் (சூர)

### அனுமார் தரு

எந்தனைச்செயிக்கபோகுமோ அம்மணி அவன்
எந்தனைச்செயிக்கப்போகுமோ
யெந்தனைசெயிக்கப்போமோ வந்தாலும் அவன்வரட்டும்
கெந்துபாய்ந்துடல்பிளப்பேன் தந்தனுப்பும்பேழைதன்னை (எந்)

### காளி தரு

பேழைதன்னைத்தாரேன்மகனே தடையொன்றில்லை
பேழைதனைத்தாரேன்மகனே
பேழைதாரேன்ராமருக்குத் தாழ்வுவராதபடியீ
ரேழுலகமும்நடுங்க வாழ்வரசுதீரனுக்கு (பே)

### அனுமார் தரு

தீரமுண்டுநம்பும் அம்மணி ராவணன்வந்தால்
தீரமுண்டுநம்பும் அம்மணி

தீரமுண்டுஎந்தனுக்கு மீறியேயெவன்வந்தாலும்
வீரியவாலினுற்சுற்றி வாரியேயெரிவேன்எட்ட (தீர)

## காளி தரு

எட்டிநடகோட்டைதாண்டியே அதிவேகமாக
எட்டிநடகோட்டைதாண்டியே
எட்டிநடநீயுஞ்சண்டை இட்டுக்கொள்ளவேண்டாமிப்போ
பெட்டியைநீகொண்டுபோக அட்டிசெய்யப்போகாதப்பா (எ)

## அனுமார் தரு

போகாமல்நானிருப்பேனே விடியுமுன்னே
போகாமல்நானிருப்பேனே
போகாதவனைவெல்ல ஆகாதேஎன்கையாலே
நாகரீகப்பெட்டிதந்தால் வேகமாயேகுவேனம்மா (போ)

## காளி தரு

ஏகுவாயெந்தன்மகனே இந்தாடாபெட்டி
ஏகுவாயெந்தன்மகனே
ஏகுவாய்பெட்டியெடுத்து ஆகுலமொழிந்திடவே
வாகுளதீரனே சத்த சாகரந்தாண்டியேயிப்போ (யே)

## அனுமார் தரு

தாண்டியேநடப்பேனம்மணி பெட்டியைக்கொண்டு
தாண்டியேநடப்பேனம்மணி
தாண்டுவேனுன்றனக்கிப்போ வேண்டியபலியுந்தந்து
ஆண்டவர்பிழைத்தாரென்று மீண்டுபாளையமேசென்று (தா)

## அனுமார் வசனம்

சரணம் சரணமம்மா தாயே உனக்குவேண்டிய பலிகொடுக்கிறேன் பிறகு பாருமம்மாதாயே.

## பொது வசனம்

இப்படியாக அனுமாரானவர் பேழையைத் தொழுது எடுத்துக்கொண்டு தூரதண்டியைக்கொண்டு அவ்விடத்தில் இருக்கும் மலையடிக்குகையிற் பேழையை வைத்துத் தூரதண்டியைக் காவலாக நிறுத்தித்திரும்பி வருகிறபோது இச்சேதிகளெல்லாம் தூதர்கள் ஓடி மயில்ராவணனுக்குச் சொல்லுவது.

## வசனம்

கேளுமையா சுவாமி மயில்ராவணேஸ்வரா ஒருகுரங்காவது நம்முடைய கோட்டைவாசலைக் காத்துவராநின்ற ராட்சதர்களை மடித்

துக் காளிகோவிலில் வைத்திருந்த ராமலட்சுமணருடைய பேழையை எடுத்துக்கொண்டு போகுதையா சுவாமி.

### தரு

அப்படியேளித மாச்சே
அனுமாரவனே கனமோ எனக்கு
தனியாகவந்திடத் துணிவோ அதற்கு

குப்புறத்தள்ளியே மெரிக்கிறேன்
குருதியும்பெருகிட சரியவே குடல்களும்
கறகறவென்றுமே யெரியுறேன்சுழட்டி
ஒருகுரங்கதுநான் அரிவேன்

ஒடியெடுத்திட தாடையிலடித்து
நீடியவாலேயும் நாடியேபிடித்து
தரையிலடிக்குரேன் சுழட்டி
சதைகளும்யெலும்பையும் உதரியேஎடுத்து

பதின்முன்னேதோரணம் தலையுமேதோடுத்து
கட்டியேவிடுகிறேன்நிமை நொடிக்குள்ளே
காரியமேதுக்கு வீரியமேதுக்கு
பாரியபட்டணம் வாரதும்யேதுக்கு

வெட்டுரேன்விட்டேனு னுன்னே
வினவியேவந்ததும் துணிவுடன்வந்ததும்
மனதிலறிந்திடக் கனிவுடன்சொல்லும்
ஆரும்வந்தனுகினதில்லே அடிப்பேன்குரங்கினே

பிடிப்பேன்காளிக்கி கொடுப்பேன்பெலியாய்
மடிப்பேன் நொடிக்குள் வாருங்கள்வீரரே சூரரே
வைத்திடும்பெட்டியெப் பத்தியமத்திடும்
சித்துள்ளகுரங்கினே மொத்துவேன்நொடியினில் (அ)

### மயில்ராவணன் கவி

என்னமந் திரியே கேளாய் இப்பெரும் பட்டணத்துள்
அன்னவன் சிவனும் விஷ்ணு அமரரும் வந்ததில்லே
சின்னதோர் குரங்குவந்து சேனையை மடித்துப் பெட்டி
தன்னேயுங் கொண்டு போனற் ருக்குவேன் எழுந்து வாரீர்

### வசனம்

ஆ ஆ வாருமப்பா மந்திரிமார்களே நமது பாதாள யிலங்கைக்கு பிர்ம்மாவிஷ்ணு ருத்திரன் முதலானவரும் இதுவரையில் வழிகண்டு வந்ததில்லே ஒரு குரங்கானதுவந்து கோட்டைக்காவலனைக் கொன்று நாம்யெடுத்துக் கொண்டுவந்த பெட்டியை எடுத்துக்கொண்டு

போகிறதாம் அதினுடைய வல்லமையை அறிவோம் எழுந்திருந்து யுத்தசன்னுத்தராய்ப் பிரயாணப் படுங்களப்பா மந்திரிப் பிரதானிகளே.

## மயில்ராவணன் தரு

கடிகியெழுந்துசூரன் முடியும்பளபளென்ன
கனவச்சிரமணிகளை அணிந்தான்
சடலமும்துடித்திட உடலிற்கவசம்பூண்டு
சண்டைக்குநடத்திடத் துணிந்தான்

விருதுகொடிபறக்க அரசரடிவணங்க
வில்லம்புகையினில் யெடுத்தான்
சிறிதுமந்திரிகளும் சேனைகள்நெருங்கிடத்
திரிசூலம் வேலுமே எடுத்தான்

அண்டங்கிடுகிடென்ன ஆனைசேனைநடக்க
அம்புருத்தூணிகட்டி நடந்தான்
கண்டவீரர்களெல்லாம் அண்டர்கள்நடுங்கிட
கடிகிச்சண்டைசெய்யத் தொடர்ந்தான்

பார்க்கும்விழிகள்கோவைக் கனிபோல்சிவந்திட
பாரியரதமீதி லேறினன்
வேர்க்கத்தேகமுக மணலாயெழும்பிட
மீசைதுடிதுடிக்கச் சீறினன் (கடி)

## மயில்ராவணன் கவி

ரதமது தன்னிலேறி நடக்கவே சேனையெல்லாம்
மதங் கொண்ட யானை முன்னே வந்திடும் சிங்கம் போலே
மிதிமிலா வீரர்சூழ விருது பேரிகை முழங்க
அதிபதி யானதீரன் அனுமனை யெதுத்திட்டானே.

## வசனம்

இப்படியாக ராவணன் ரதகஜதுரக பதாதிகளோடு பூமி ஆகாயமெல்லாம் கிடுகிடென்றதிர ரணபேரிகை வண்டை மல்லரி முழங்க ஆனையைக்கண்ட சிங்கம்போற் கெர்ச்சித்து அனுமாரை வளைத்துக்கொண்டு யுத்தியம் செய்கிற விதங்காண்க.

## மயில்ராவணன் தரு

கும்பல்கும்பலாய்வந்துவளைத்துமே அரக்கர்படைகள்
குன்றைப்பிடுங்கி வீசியெரிந்தாரே

## அனுமார் தரு

எரிந்தமலையையெகிரிப்பிடித்துமே அனுமந்ததேவன்
விரிந்தபடையை வீசியடித்தானே

### மயில்ராவணன் தரு

அடித்தபோதுதுடித்து அதட்டியே அரக்கர்படையை
ஒடித்துமரத்தை வீசியெரிந்தாரே

### அனுமார் தரு

வீசியெரிந்தமரத்தைப்பிடித்துமே அனுமந்ததேவன்
தூசிபோலேபறக்க அடித்தானே

### மயில்ராவணன் தரு

அடிக்கமல்லரிருப்புலக்கையை அரக்கர்படைகள்
முடிக்கிசுழற்றிவோங்கி அடித்தாரே

### அனுமார் தரு

ஓங்கிஅடித்தஅரக்கர்படைகளை வாலாலேசுத்தி
வாங்கிசுழற்றிசிதற அடித்தானே

### மயில்ராவணன் தரு

சிதறிப்படைகள் மடியக்கண்டுமே அரக்கர்படைகள்
பதறிப்பிடிக்கயெகிறிக் குதித்தாரே

### அனுமார் தரு

குதித்துவாலை நீட்டிப்பிடித்துமே அனுமந்ததேவன்
எதிர்த்தராட்சதர் படையை அடித்தானே

### அனுமார் கவி

நெடியவாலதனைவீசி நிமைக்குளே அரக்கரெல்லாம்
உடல்தலைவெவ்வேருகி யோடவேகுருகிவெள்ளம்
மடியவேபடைகளெல்லாம் மயிலனுங்கடுகடுத்து
இடியெனஅதட்டிப்பொங்கி யெதிர்த்துமுன்குதித்திட்டானே

### வசனம்

இப்படியாக அனுமாரானவர் வாலைநீட்டி வீசியடிக்க அநேக பலராட்சதரெல்லாம் கண்டகண்ட விடத்திலே விழுந்துமடியப் படைகளெல்லாம் தலைமாடு கால்மாடாகவிழுந்து முறிந்தோடச் சின்னபின்னமாகி யிரத்தாறு ஓடக்கண்ட மயில்ராவணன் கண்களிலே அக்கினிப் பொறிபறக்க மீசை படபடென்ன பேரிதண்டை பல்லரிமுழுங்க ஆனையைக்கண்ட சிங்கம்போலேகெர்ச்சித்து அனுமாரை வளைத்துக்கொண்டு யுத்தஞ்செய்கிற விதங்காண்க.

### மயில்ராவணன் தரு

வாடாஅனுமந்தா யீடோயெனக்குநீ
வருகுதுஒருகணை அரியுதுபாரடா
வாவாஒருபாணம் கரகரவென்றுமே
வடிக்கணைசிதறிட அடிக்குதுபாரடா வா

### அனுமார் தரு

பாரடா ராட்சதப்பயலே யெனக்குநீ புன்னே
தலைக்காலாய்க் கிழிக்குறேன்
பலபலகணைநீயும் சிலசிலகணையோடு
பத்தியேஉந்தனை மொத்துவேன்பாரடா பா

### மயில்ராவணன் தரு

பாரடாவென்றுஎன்னை கூரியபயலேவுன்னை
பல்லையுடைக்குறேன் கல்லையுந்தொடுகிறேன்
பசபசவென்றுமுழிக்கும் கசகசவென்றுன்னை
பறக்கவேஉடைக்குறேன் சிறக்கவேபல்லைநான் பா

### அனுமார் தரு

பல்லைக்கடித்துவிட கல்லையும்பிடித்துன்மேல்
பாய்ந்துமேமடிக்குறேன் சாய்ந்துமேபிடிக்குறேன்
படபடவென்றுமீசை துடித்தாலேயென்னை
பத்தியேகுத்திட வெத்திநீசெய்வாயோ பா

### மயில்ராவணன் தரு

வெற்றிசெய்வண்டாவுந்தன் வீரியமரிவேண்டா
விடுகிறேனிதோபாணம் மடிக்குறேன்உந்தனை
விட்டேன்கணைகளை யெட்டிப்பிடிபார்ப்போம்
வெட்டியேதோரணம் கட்டுவேன்பாரடா வெ

### அனுமார் தரு

கட்டுவேனென்றுசொன்ன மட்டியில்ராவணு
கையேண்டாவீசுருய் பொய்யேண்டாபேசுறீய்
கரிகரிதானேநீயும் அரிஅரிதானேஉன்னை
கசக்கியேகையால் நசுக்குவேன்பாரடா கட்

### மயில்ராவணன் தரு

நசுக்குவேனென்றுசொல்லு பிசுக்குபேசுங்குரங்கே
நாக்கைகடித்துவிழ நோக்கிக்கணையைவிட்டேன்
நறுக்குதுபாராய்கழுத்தை அறுக்குதுபாராய்
இங்கேநாடியேவந்தாய்நீ கேடுகளதுவந்துதே நசு

### அனுமார் தரு

கேடுகள்வந்தல்லோ ராமரைப்பகைத்தாய்நீ
கெர்வமேண்டாவுனக்கு அரிவேண்டாதிருடனே
கிட்டியேவாடா வாலால்உன்னை கட்டுவேன்போடா
உன்னைக்கிழித்திடவந்தேனே பிழைத்திடப்போரியோ கே

## மயில்ராவணன் கவி

தீவுகளறிந்துவந்த சின்னவோர்குரங்கேகேளாய்
தேவருமெனையெதிர்க்கார் தெரியாமல்வந்தெதிர்த்தாய்
யேவியபாணத்தாலே யிடறுவேன் தலைதெரிக்கப்
போவனேவுனக்கிடைந்து பூட்டினேன் பாணந்தானே.

## வசனம்

அடாவாடா சிறுகுரங்கே யாவரும் அணுகாத இந்தபாதாள இலங்கைக்கு வந்தாயல்லவா மும்மூர்த்திகளும் தேவர்களும் என் முன்னேநிற்க பயப்படுவார்கள் நீயா எனக்குயீடு உன்சிரசைகண் டிக்கத்தக்கதாக அஸ்திரம்வருகுதுதப்பித்துக்கொண்டு ஓடிப்போ.

## அனுமார் தரு தர்க்கம்

மயில்ராவணனேமல்லுக்குவாடா கையில்
வல்லுலக்கைகடிகின னெடுத்தேனே மயி

## மயில்ராவணன் தரு

எடுத்தேன் இரும்புலக்கை இதோபாருங்குரங்கே
அடித்துன்னைமடிப்பேன் அரியடாவலுவை வலு

## அனுமார் தரு

வலுவைநானறிவேன் வல்லமையாகவந்தால்
தலைதனைபுடைப்பேன் தாண்டியேகுதித்து வலு

## மயில்ராவணன் தரு

குதித்தேஅடித்துன்னை கொல்லுவேன்பாராய்
எடுத்தேன்பாணத்தால் இதோசாடித்தேனே

## அனுமார் தரு

குதித்தேஅடித்தேன் கொல்லுவேன்பாராய்
யெதுத்துபாணத்தால் இதோசாடித்தானே குதி

## மயில்ராவணன் தரு

அடித்தேஇடித்தேன் அதைதட்டிவிலக்கி
யெடுத்துக்கையோங்கி யெட்டியேயுதைத்தேன் அடி

## அனுமார் தரு

அடித்தாய்பிடித்தேன் அதைத்தட்டிவிலக்கி
எடுத்துக்கையோங்கி யெட்டியேமோதினேன் அடி

### மயில்ராவணன் தரு

சுழற்றியே அடித்தாய் தோள்வலிமாரா
உதட்டியேதேரின்மே லோடியேயேறினேன் சுழ

### அனுமார் கவி

தேர்மீதிலேறக்கண்டு சிதைத்துமே அனுமாரோடி
பாரியகரிகள்சேனை படைகளைவாலால்சுத்தி
வாரியேஉயரவீசி வல்லவன்யேறுகின்ற
தேரையுஞ்சுழற்றிச்சுத்தி சிதறவே அடித்திட்டானே.

### வசனம்

இவ்விதமாக அனுமார் அடியால்நொந்துஓடி தேர்மீதிலேறக் கண்டு அனுமார் அவனையும் அவனைச்சூழ்ந்திருக்கும் ஆனைசேனைக ளெல்லாம் வாலினலேசுத்தி கரகரவென்றுச்சுழற்றி நிலத்திலே அடிக்க ரதமுதலானதும் பொடிபொடியாக மயில்ராவணன் நடு நடுங்கி வருத்தமடைந்து கேசரிமார்க்கத்தில் எழுந்து ஆகாயவீதி யில்நின்று தைரியவானகி ஆக்கிரமித்து அனுமார்மீது எதித்து யுத்தம்செய்கிற விதங்காண்க.

### மயில்ராவணன் தரு தர்க்கம்

ஆரடா அனுமந்தா அஷ்டகிரியைக்கையால்
ஆட்டிப்பிடுங்கி யுன்மேற்போட்டேனே

### அனுமார் தரு

பாரடாநானெரு பாரியமலைகொண்டு
பதைக்கபதைக்கவுன்னை வதைப்பேனே

### மயில்ராவணன் தரு

சந்திரசூரியமதிமண்டலங் கடந்தப்பால்
தாண்டினலும் உன்னைவிடுவேனே

### அனுமார் தரு

மெத்தப்பெரியமலை வில்லம்பூட்டியே
விட்டாலுமுன்கையிற் படுவேனே

### மயில்ராவணன் தரு

படுவேனேஉன்கை பராக்கிரமந்தனைச்சற்றே
பார்த்துளந்தன் முன்னேநில்லடா

### அனுமார் தரு

புல்லனேநீயெட்டப்போனலும் விடுவனே
பிடித்துக்காலையும் ரண்டாய்க்கிழிப்பேனே

### மயில்ராவணன் தரு

அழிப்பேனென்றுசொன்ன அனுமந்தப்பயலே
அடுக்காய்மலைவாரி எரிந்தேனே

### அனுமார் தரு

மல்லுக்குப்பயந்துநீ மண்டலமேறியே
வந்தாலும் உந்தனையழிப்பேனே

### மயில்ராவணன் தரு

தெரிந்தபலத்துடனே எரிந்தமலையைப்பற்றி
சீரிச்சுழட்டி உன்னை அடித்தேனே

### அனுமார் தரு

அரிந்துவுந்தனையிப்போ ஆணுவமழியவே
அண்டமளாவ சுயரூபம்யெடுத்தேனே

### மயில்ராவணன் தரு

எடுத்தமலைகள்எல்லாம் விடுத்துஒன்றுஒன்று
ஏகமாய்நான்வாரி தட்டினேன்பாராய்

### அனுமார் தரு

வாட்டமாய்நான்ரண்டு காலையும்பற்றியே
வாரிச்சுழட்டிமீறி அடித்தேனே

### மயில்ராவணன் தரு

கூட்டியேகாலையும் நீட்டிகிழித்துமே
குரூதிவாருதிபோக விடுத்தேனே

### அனுமார் கவி

மீரியேவிஸ்வரூபமாகி வீரியசூரன்காலை
வாரியேசுழட்டியேமோதி வல்லவன்தனைப்பிளந்து
கோரானகடலில்வீச நிற்கவேதேவர்வாழ்த்த
மேருள்ளோர்மலர்சொரிந்தார் பிழைத்தனெனபணிந்திட்டாரே.

### வசனம்

அகோதெப்படியென்றால் அனுமார்விஸ்வரூபமெடுத்து மயில்ராவணனைப்பிடித்து இருபிளவாகக்கிழித்து சமுத்திரத்தில்போட தேவர்கள்வாழ்த்த பாதாள இலங்கையிலிருக்கும் ஆலவிருட்சத்தின் குகையில் மயில்ராவணனுடைய உயிராகிய அஞ்சு வண்டுகளையும் பிடித்து நெகக்கண்ணினால் கசக்கிப்போட்டு இப்பால் பாதாள லங்கையை பட்டாபிஷேகம் செய்யும்பொருட்டு தன் குமாரனாகிய

மச்சகெர்ப்பனையும் துரதண்டியின் தன்குமாரனுகிய சுபகேதுவை வரவழைக்க அப்போது இருவரும் சபைக்கு வருகிறவிதங்காண்க.

### மச்சகெர்ப்பன் சுபகேது கவி

அந்தணரும்வந்துமுறை வேதம்பாட
அரிவையர்க ளிருபுரமும்கவரிவீச
விந்தையுள்ள ஆரமது மார்பிலாட
வீராதிவீரரெனும் மச்சகெர்ப்பன்
பந்தமுடன் இருவர்களும் கூடிக்கொண்டு
பாங்குடனே அனுமானைக் காணவேண்டி
சிந்தையது களிப்புடனே சபையைநாடிச்
சீக்கிரமாயிருவர்களும் வருகின்றுரே.

### தரு

வந்தான்சுபகேது மச்சகெர்ப்பன் வாராரிதோபாரீர்
வந்தானசுபகேது மன்னர்மன்னர்நடுங்க
வந்துமிகக்களித்து சீரால்நடைநடந்து வந்

சிரசில்மகுடமின்னச் சீராய்புஜங்கள்துன்ன
பருத்தபுஜமிலங்கப் பாங்காய்நடைநடந்து வந்

வாங்கும்வில்லும்பிடித்து வாளாயுதமுங்கொண்டு
பாங்காய்நடைநடந்து பருத்தபுஜமுந்தட்டி
அனுமானழைத்தசேதி அறிந்துவருவோமென்று
பரிவாய்மனமகிழ்ந்து பாலர்களிருவரும் வந்

### சுபகேது குரு கவி

சிந்தையிலன்பாய் செல்வர்கள்நாங்கள்
வந்தணம்உந்தன்மலர் திருவடிக்கே.

### வசனம்

சரணம் சரணமையாசுவாமி உன்னுடைய பாதாரவிந்தங்களுக்கு வந்தனம் வந்தனமையா சுவாமி.

### அனுமார் குரு தரு

வந்தனம்செய்த மைந்தரேவாழி
இந்தப்பட்டணத்தைத் தந்தேனுங்களுக்கே.

### வசனம்

வாருங்கள் மைந்தர்களே மகா ஆசீர்வாதம் செய்தேன் இந்தப் பாதாள யிலங்கையை உங்களுக்கே பட்டாபிஷேகம் செய்து வைக்கிறேனப்பா மைந்தர்களே.

## அனுமார் பட்டந்தரிக்குந் தரு

பட்டந்தரித்தனரே இருவருக்கும்
பட்டந்தரித்தனரே

பட்டந்தரித்தனர் பாலன்சுபகேதுக்குப்
மட்டில்லாததுபெற்ற மச்சகெர்ப்பசூரனுக்கும் பட்

எண்டிசைதனிலுள்ளோர் எவருங்கண்டடிதாழ
மண்டலத்தோர்புகழ்ச்சியுடன் மறையோர்ஆசீர்வதிக்க பட்

வந்தமறையோர்சூழ வஞ்சியர் ஆலமோடு
சிந்தைமகிழ்ச்சியுடன் செல்வர்கள்இருவர்க்கும் பட்

மன்னன்மயில்ராவணன் தன்னையேவதைசெய்து
உன்னிதமாகவே கன்னிமனங்களிக்க பட்

## அனுமார் கவி

ஜெபமாலைகரமேந்தும் முனிவர்சூழச்
சேயிழையும் இருபுறத்தில்கவுரிவீச
தபயோகவேதியரும் வேதம்பாடச்
சகலவாத்தியமுழங்கத் தேவர்கள்வாழ்த்த
அபிநயனமாதர்களும் ஆலமேந்த
அந்தணரும்முடியளிக்க அனுமார்கையில்
சுபகேதுமச்சகெர்ப்பன் இருக்கும்
துலங்குமணி மகுடமதுமனுகினரே.

## வசனம்

இவ்விதமாக அனுமாரானவர் பாதாளயிலங்கையை மச்சகெர்ப்பனுக்கும் சுபகேதுக்கும் மகுடாபிஷேகம் செய்து வைத்து சுவாமிகளிருவரையும் நித்திரைகலையாமல் எடுத்துக்கொண்டுபாதாள இலங்கையைவிட்டு சிவராத்திரி மலைக்கு வருகிறவிதங்காண்க.

## அனுமார் தரு

விசையுடன்நடந்தான் அனுமந்ததேவன்
விசையுடன்நடந்தார்

விசையுடன்நடந்தாரே திசைகளும்அதிரவே
அசைவில்லா அதிவெகு புஜபலதீரனும் வி

விடியற்காலமாகுதே வெண்மதிபாடாகுதே
திறமாய்அருணன் கதிரோனுக்கு தேர்விட்டுவாரானே வி

## அனுமார் தரு

ராமரைமீட்டுக்கொண்டு நலமானஅனுமார்வந்து
தாமரைத்தண்டுசன்னல் தாண்டியேகரைகடந்தான்
மாமணிவிபூஷணன்தான் வழிபார்த்துகண்கள்பூத்துப்
பூமியில்புகழும்ராமர் பெட்டியைக்கண்ணிற்கண்டான்.

## வசனம்

இப்படியாக விபூஷணர்சொல்ல அனுமான் தான்பாதாள லங்கைக்குப்போய் வந்த சேதிகளெல்லாஞ்சொல்லி இப்போது நடந்த விஷயங்களை நீரும்நாமும் அறிந்ததாக யிருக்கட்டுமென்று சிவராத்திரி பர்வதம்வந்து பெட்டியைத்திறந்து ராமலட்சுமணுள் இருவரையுமெடுத்து அவாளவாள் பஞ்சணையில்வளர்த்தி முன்போலே அவரவர்கள் இருந்தயிடத்தில் நித்திரைசெய்து யிருக்கையில் கதிரோனுகிய சூரியபகவானுனவர் கிழக்கு திசையில் உதயமானுர் பிறகு ராமலட்சுமணுள் இருவரும் நித்திரைதெளிந்து எழுந்திருந்து காலக்கடன்களை முடித்துக்கொண்டு இராவணன் பேரில் யுத்தம்செய்யும் பொருட்டு அனுமாருடன் யோசனை செய்வதென்பதாம்.

## வாழி விருத்தம்

இந்தமாநாடகத்தை யியற்றினேர்வாழிவாழி
சிந்தையுமிகக்களித்துச் சிறப்புடன்படித்தோர்வாழி
அந்தமாயாடினேர்க ளனைவரும்கேட்டோர்வாழி
விந்தைசேரனுமான்விபூஷணர் வாழிவாழிமாதோ.

## மங்களம்

---

அசாவேரி-ராகம்-ஆதிதாளம்

### பல்லவி

ஸ்ரீராமச்சந்திரனுக்கு ஜெயமங்களம் நல்ல
திவ்யமுகச்சந்திரனுக்கு சுபமங்களம்

### அநுபல்லவி

மாராபி ராமனுக்கு மன்னுபரந்தாமனுக்கு
ஈரார் நாமனுக்கு ரவிகுலசோமனுக்கு ஸ்ரீராம

### சரணங்கள்

கொண்டல்மணிவண்ணனுக்கு கண்ணனுக்குமங்களம்
கோசலைகுமாரனுக்கு வீரனுக்கு மங்களம்

புண்டரீகத் தாளனுக்கு
பூச்சக்கிர வாளனுக்கு
தண்டுளபத் தோளனுக்கு
ஜானகிம ணாளனுக்கு ஸ்ரீராம

கோவைமணிவாயனுக்கு மாயனுக்கு மங்களம்
கோதண்ட கையனுக்கு மெய்யனுக்கு மங்களம்

தாவுகுண சீலனுக்கு
சத்தியவி சாலனுக்கு
தேவானு கூலனுக்கு
தெசரதன் பாலனுக்கு ஸ்ரீராம

பகிரண்ட நாதனுக்கு தேவனுக்கு மங்களம்
பரதனும் அன்பனுக்கு முன்பனுக்கு மங்களம்

சகலவி லாசனுக்கு
தருமந்த லாசனுக்கு
அகிலவி வாசனுக்கு
அயோத்தியா வாசனுக்கு ஸ்ரீராமர்

மயிலிராவணன் சண்டை நாடகம் முற்றிற்று.

---

திருமகள் விலாச அச்சு நிலைய

CAUTION
FILM ROLL ENDS
REMOVE LABEL